REGD 4642 M

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7.
½ „ 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 19-3-50 | இதழ் 38



# நினைவலைகள்

சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிக்கும் சந்தர்ப்பம் அவர்களைத் தேடிவந்தது! வியாபாரம் பேசி, பொருள்களை விற்று, முதலைக் காண வந்த அவர்களை சீர்கெட்ட மன்னர்களின் போட்டிப் பூசல், மகுடத்தை ஏற்கும் ஆசையைத் தூண்டியது! தந்திரசாலிகளின் சாமர்த்திய வேலைகள், இந்தப் பரந்த துணைகண்டத்தை அவர்கள் கைக்கு கொண்டுபோய்த் தள்ளியது. வியாபாரக்குழு, கிழக்கிந்தியக் கம்பெனி இந்நாட்டின் செங்கோலையேற்கும் எதிர்பாராத வாய்ப்பைப் பெற்றது!

பேரரசுகள், சிற்றரசுகள், எல்லாம் அவர்களை, "ஆபத்பாந்தவர்"களாக்கிக்கொண்டு, தங்களுக்குள் விருக்கும் போட்டிப் பூசலை — நாடுபிடி சண்டையை—தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசையோடு, வந்தவர்களை அண்டினர்—சரண் அடைந்தனர்! வர்த்தகம் செய்யவந்தவர், நாடாளுவோராயினர்!

பலவேறு ராஜ்யங்களாகவிருந்த இப்பரந்த துணைக்கண்டம் — ஏக இந்தியா ஆயிற்று! ஒரே ஆட்சிஉதயமாயிற்று — பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சிருஷ்டிக்கப்பட்டது!

சிருஷ்டிக்கப்பட்ட ஆட்சியை நிரந்தரமாக்கிக்கொள்ள — வெள்ளையர் விரும்பினர். மக்களை ஆளும் மகானுபாவர்கள் தாங்கள் என்ற மமதை, அவர்களை ஆட்டிப்படைத்தது "வெள்ளைக்காரனுக்கிங்கென்ன வேலை, மிளகு வாங்கவந்தவன் 'மிரட்டலுக்கு அஞ்சுவதா!—நாங்கள் ஆண்ட பரம்பரை, கோழைகளல்ல! ஆட்சிப்பீடமேறி அமர்ந்து எங்களை இந்த 'பறங்கியர்' ஆள்வதா, அடாது; இதை அனுமதிக்கமுடியாது" என்று எதிர்த்துக் கிளம்பிய வீரக்கனலையெல்லாம் அவர்கள் அணைக்கவேண்டியேற்பட்டது. புரட்சிகள், சித்திரவதைகள், வெட்டு, குத்து, சண்டை — ஆங்காங்கே 'சிறு' அளவில் எழும்பிக் கொண்டிருந்தன!

எழுச்சியைப் பறந்து திரிந்த புறாவுக்குக் கூண்டு தங்கள் நாடுண்டு தங்கள் வாழ்வுண்டு என்றிருந்த மக்களுக்கு அடிமை விலங்கு!

புயலையடக்கி, தங்கள் சுரண்டல் வழியை அமைத்துக்கொள்ள ஆட்சிப்பீடமேறிய ஆங்கிலேயர் நானாவித நடவடிக்கைகளை எடுக்கலாயினர்!

ஆள்பவர் அந்நியர் - எனவே இந்தியர்களைத் தங்கள் ஆட்சிக்கு அடிமைப்படுத்த பலவழியிலும் முயன்றனர். 'வேலை தருகிறேன்' என்ற இதமானசொல், 'விளையாடாதே, சிறை கிடைக்கும்' என்றமிரட்டல்—அவர்களின் ஆயுதங்கள்!

கிழக்கு இந்தியக் கம்பெனி இந்தியநாட்டின் அரசியலைமேற்கொண்ட காலமுதல், பின் பிரிட்டிஷ்மன்னரின் நேர்ப்பார்வையின் கீழ் வந்தகாலத்திலிருந்து 1947 ஆகஸ்டு 15 ஏற்படும் வரை—தங்கள் ஆட்சியை நிலைநாட்ட அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் அனந்தம்.

✲

1878—இந்திய நாட்டின் ஆட்சிப்பீடத்தை கிழக்கு இந்திய கம்பெனியார் ஏற்றுத் தேச பரிபாலனம் செய்து கொண்டிருந்த ஆரம்ப காலம். ஹேஸ்டிங்ஸ் பிரபு, கம்பெனியின் சார்பில் இங்கு அனுப்பப்பட்ட கவர்னர் ஜனரல். ஒவ்வொருகவர்னர் ஜனரல் கடமையும், இங்கு ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை, நிரந்தரமான வகையில் நிலைக்கச் செய்ய முயல்வதுதான். எனவே, ஹேஸ்டிங்ஸ் தன்னாலான கைங்கர்யத்தைச் செய்தான், பரந்த துணைகண்டத்தை ஆங்கில ஆட்சிக்கு அடிபணியவைக்கும் நடவடிக்கைகளைத் துணிவுடன் மேற்கொண்டான் — அவைகளில் முக்கியமானது வங்காள ஒழுங்கு முறைச் சட்டம்!

பாம்புக்குப் பெயர் பசு! அடக்கு முறைச் சட்டத்துக்குப் பெயர் ஒழுங்குமுறை"!

சீறும் புலிகளாகயிருந்தோரை, அடிபணியா மக்களை அடக்க, ஆங்கிலேயர் இந்நாட்டில் வீசிய முதல் அடக்குமுறை 'அம்பு' இதுதான்! எதிர்த்துப் பேசியோரை, அடக்கவும், தண்டிக்கவுமான அதிகாரங்களைத் தந்தது இந்தச் சட்டம்

ஆங்கில ஆட்சியை எதிர்த்த, சுதந்திர கர்ஜனைபுரிவோரை அடக்கச் சட்டம் செய்துகொண்டான்! சிருஷ்டிக்கப் பட்ட தங்கள் சுயநலச் சுரண்டல் ஆட்சி தங்கு தடையின்றி நடைபெறப் பாதுகாப்புத் தரும் சட்டம் ஒன்றை அமுலாக்கினன்—ஒழுங்கு முறை என்ற பெயரில!

X X X

1878—இந்தியப் பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது — அப்போது கவர்னர் ஜனரலாகஇருந்த லார்டுலிட்டனால்! மக்களின் எண்ணங்களை எதிரொலிக்கக் கூடாது, ஆட்சியை எதிர்த்து எதுவும் பேசக்கூடாது என்று 'முதல் வாய்ப்பூட்டை' போட்டான். 1891-ல் மீண்டும் அச்சட்டம், குறைகளில்லாத வகையில் —உயிரூட்டப் பட்டது!

பத்திரிகைகளின் சுதந்திரத்தை, எழுத்துரிமையைக் கட்டுப்படுத்த வெள்ளையன் வீசிய அடக்குமுறைப் பாணத்தைக் கண்டு பலர் கொதித்தனர்—கண்டித்தனர்! குழந்தைப் பருவத்தில் உருவாகிக் கொண்டிருந்த காங்கிரஸ் இயக்கமும் தன் கண்டனத்தைத் தெரிவித்தது. 'எழுத்துரிமையைப் பறிக்கும் மோசமான சட்டத்தைப் பாருங்கள்! என்று முழக்கமிட்டது!

X X X

**1908**—தினசரிப் பத்திரிகைகள், அச்சகங்கள் ஆகியவைகளை [illegible]

லைப்படுத்தும் 'புது அம்பு' அந்நிய ஆட்சியின் அம்புறாத் துணியிலிருந்து எடுத்து வீசப்பட்டது — இந்தப் பத்திரிகைச் சட்டப்படி, பத்திரிகைகளிடமிருந்தும் அச்சகங்களிடமிருந்தும் ஜாமீன் தொகை கோரப்படும். அவைகள் சர்க்காருக்கு ஆட்சேபகரமாக நடந்துகொண்டால் என்ற சட்டம் உருவாயிற்று! எழுத்துரிமையைப் பறிக்கும் இச்சட்டங் கண்டு, 'பிற்போக்குத்தனம்' நிறைந்தது என்று காங்கிரஸ் தலைவர்கள் குறிப்பிட்டனர்—கண்டனக் குரல் எழுப்பினர்!

X X X

**1910**—ஆட்சேபகரமான கூட்டங்களைக் கூட்டக் கூடாது!

கிரிமினல் சீர்திருத்தச் சட்டம்! மாணவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

என்று கவர்னர் ஜெனரல் பெண்ட்லண்டு பிரபு பல அவசர கால சட்டங்களை அள்ளி வீசினார்! அப்போது வங்கப் பிரிவினையை எதிர்த்து மக்கள் தீவிரமாகக் கிளர்ச்சி செய்ததால், அவைகளை நசுக்குவதற்காக, 'நாட்டில் அமைதி நிலவவேண்டும்' என்பதற்காக இந்த 'சத்' காரியத்தை வெகு வேகமாகச் செய்தார்—பல புது அடிமைச் சட்டங்களை உண்டாக்கினர்!

X X X

**1915**—முதலாவது உலகப் போர் துவக்க காலம். இந்தியாவில், பல அடக்குமுறைச் சட்டங்கள் தாண்டவமாடத் துவங்கின.

காவலில் வைப்பது, கைது செய்வது, விசாரணையின்றி நாட்டை விட்டு வெளியேற்றுவது போன்ற அதிகாரங்களை வழங்கும் இந்திய பந்தோபஸ்து சட்டம் (Defence of India Act) பிரகடனப்படுத்தப்பட்டது!

இந்த அடக்குமுறைச் சட்டம் குறித்து 1916ல் லக்னௌவில் கூடிய காங்கிரஸ் மாநாடு பலமாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானத்தைக் கொணர்ந்தோரும் ஆதரித்தோரும் தீப்பொறி பறக்கப் பேசினர்— வாழ்க்கையைச் சுவைக்காத வாலிபர்களைப் பலியிடுவதா? வாழப்போகும் இளைஞர்களை ஒழிக்க இத்தகைய சட்டம் இயற்றப்படுவதை, சகிக்க முடியாது' எத்தனை பேர் சிறைகளில் கிடக்கிறார்கள்—சித்திரவதைப் படுகிறார்கள்— பழைய அடக்குமுறைச் சட்டங்கள் மக்களின் மென்னியைப் பிடித்து அழுத்திக்கொண்டிருக்கும்போது, மென்மேலும் கஷ்டமா? இதைத் தாளமுடியாது — வாபஸ் பெறு! அந்நிய ஆதிபத்தியமே வாபஸ் பெறு!" என்று சங்கநாதம் செய்தனர் காங்கிரஸ் தலைவர்கள். லக்னௌ மாநாட்டில் என்று மட்டுமல்ல, 1917ல் கல்கத்தாவில் கூடிய போதும் கண்டித்தது காங்கிரஸ்!

* * *

**1918** "வியர்வை, கண்ணீர், இரத்தம்! அழுகுரல், அலறல், குண்டடி! இவைகளை வழங்கிய ரௌலட் சட்டம் பிரகடனம். கொடுமை நிரம்பிய இச்சட்டத்தை எதிர்க்கத்தான் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். "இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளைச் சீர்குலைக்கும் சட்டம் இது" என்று காங்கிரஸ் தலைவர்கள், கண்டித்தனர். பிரஜா உரிமையைப் பறிக்கும் இச்சட்டம் ஒழிக, என்று முழக்கமிட்டனர். இச்சட்டம் கிளர்ச்சி செய்பவர்கள் மீது தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், கைது செய்து அடைப்பது முதலான காரியங்களைச் செய்ய அதிகாரம் தந்ததாகும்.

* * *

**1928** வெளிநாட்டிலிருந்து வரும் கம்யூனிஸ்டுகளையும் தொழிலாளர் கிளர்ச்சித் தலைவர்களையும் அடக்கவேண்டும் என்று காரணம் காட்டிப் பொதுப்பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது இந்திய சட்டசபையிலிருந்த காங்கிரஸ்கட்சியினர் "இச்சட்டம் கொண்டு வருவதற்குப் போலிக்காரணம் காட்டப்படுகிறது, சுயராஜ்யப் போராட்டத்தை யடக்க, தேசியவாதிகளைச் சிறைக்குள் தள்ளவே, கம்யூனிஸ்டுகளும் தொழிலாளர்கள் தலைவர்களும் காரணமாகக்காட்டப்படுகிறார்கள். எனவே, இம்மசோதா நிறைவேற்றப்படக்கூடாது" என்று எதிர்த்தனர்.

பொதுப் பாதுகாப்பு மசோதா (Public Safetjy Bill) கூடாதெனக்கூட்டு முன்னணியுடன் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் எதிர்க்கவே, இது நிறைவேற்றப்படவில்லை! எனினும் மீண்டும் அடுத்த ஆண்டு இது சபைமுன் கொண்டு வரப்பட்டு வைஸ்ராய் தனது அவசரச்சட்ட அதிகாரத்தைப் பிரயோகித்து, இம்மசோதாவை உயிருள்ளதாக்கினர்!

அதுமுதல், எதற்கெடுத்தாலும் 'அவசரச் சட்டங்களை'ப் பிரகடனப்படுத்துவது வழக்கமாயிற்று! மத்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் தங்களுக்குப் போதிய அதிகாரம் தேவைபபடும் போதெல்லாம் அவசரச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தின!

அவசரச் சட்டங்கள் மூலம் ஆட்சி நடத்தப் படுவதை நாடு முழுமையும் எதிர்த்தது—விடுதலைப் படையின் முன்னோடிப் கட்சியான காங்கிரஸ் கடுமையாக இம்முறையை எதிர்த்தது, 'எதற்கெடுத்தாலும் அவசரச் சட்டங்களா? கூடாது— இம்முறை தகாது! என்று தலைவர்கள் எல்லாம் கண்டித்தனர்.

இவ்வளவு கண்டனத்துக்கும் இந்திய மந்திரி சொன்ன பதில் இது:

> "அராஜகம் இந்தியாவில் ஏற்படாமல் தடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் அவசரச் சட்டங்களை சர்க்கார் பிரகடனம் செய்கிறது. சர்க்காரை எதிர்த்துப் பயமுறுத்தல்கள் கிளம்பிக் கொண்டேயிருப்பதால்தான் அவசரச் சட்டங்கள் அவசிய மாயிற்று."

X X X

1942—இரண்டாவது உலகப் பெரும் போர்க்காலம்—வெள்ளையராட்சி காங்கிரஸ் கிளர்ச்சியை நசுக்குவதற்காக, தனது அவசரச் சட்ட அதிகார மூலம், பல புதுச் சட்டங்களைச் செய்தது. தடியடியும் குண்டுகளும மட்டுமல்ல, இந்திய பாதுகாபபுச் சட்டம், கூட்டு அபராத விதிப்புச் சட்டம், விசேஷகிரிமினல் கோர்ட் சட்டம், நஷ்ட ஈடுச்சட்டம்

என்று பல அவசரச் சட்டங்கள், பிரகடனப் படுத்தப் பட்டன!

இந்தப் போக்கை, காங்கிரஸ் காரர்கள் பலமாகக் கண்டித்தனர், 'கொடுங்கோன்மை ஆட்சி' என்று வர்ணித்தனர். கிளர்ச்சி செய்தனர், 'ஆகஸ்டு' நடை பெற்றது!

✲

அந்நியன், தான் எடுத்தடி வைத்து 'எப்படியோ பீடம்ஏறி' பெற்ற ஆட்சியை நடத்த கையாண்ட அடக்கு முறைச் சட்டங்களின்—சிறு குறிப்புகள் இவை!

ஆளவந்த அந்நியன், இந்திய மக்களை அடிமைப்படுத்த இவ்வளவு சட்டங்களைச் செய்தான்.

தன்சுரண்டல் நீடிக்க, சாம்ராஜ்யம் சரியாமலிருக்க இத்தனை அடக்கு முறைப் பாணங்களை எடுத்தெறிந்தான்!

பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்து சுயராஜ்யம் வேண்டும் என்ற எண்ணத்தைப்பரவவிடாமல் செய்யவேண்டும், மக்களைப் பயப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தான் அவன், தனக்கு வேண்டிய சட்டங்களையெல்லாம் பிரகடனப்படுத்தினான். தடியடி, சிறை, துப்பாக்கி — இவைகள் பேசின! பத்திரிகைகள் நசுக்கப்பட்டன! எழுத்துரிமை, பேச்சுரிமை, எல்லாம் பறிக்கப்பட்டது, அவன் ஆட்சியில்!

எதேச்சாதிகாரமும், சுயநலச் சுரண்டலும் இதயத்தில் குடி கொண்ட காரணத்தால் மக்களை, மாக்களென எண்ணி இவ்வளவு கொடுமைக்குள்ளாக்கினான்.

இத்தனை அக்கிரமங்களையும், காங்கிரஸ் இயக்கம் அன்று கண்டித்தது மக்களுரிமைக்காகப் போராடிய து கண்ணீர், இரத்தம்இரண்டும்கலந்து சிந்தப்பட்டது! "அடக்கு முறை ஒழியவேண்டும், அந்நிய ஆட்சி அகலவேண்டும்" என்ற வீரமுழக்கங்கள்—கிளர்ச்சிகள் நாட்டின் நாலு பக்கங்களிலும் எழும்பின!

* *

இன்று, அந்நியன் போய்விட்டான்! அவனது ஆட்சிப்பிடியினின்றும் மக்கள் விடுதலை அடைந்துவிட்டார்கள் — குடியரசு நாடாக ஆகிவிட்டது!

ஆண்டவன் அந்நியன்—எனவே இந்நாட்டு மக்கள் நலனில் அக்கரை காட்டவில்லை. அடக்கி, மடக்கி, அகப்பட்டதைச் சுருட்டிச் செல்வதையே நாட்டமாகக் கொண்டிருந்தான்! இந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக — எண்ணற்ற அடக்குமுறைச் சட்டங்களை, வீசினர் மக்கள் மீது! அவசரச் சட்டங்களாலேயே ஆட்சி நடத்தினர்.

கேட்டதற்கு, அமைதிக்கு குந்தகம் விளைவிக்காமலிருக்க, அராஜகம் நாட்டில் பரவாமலிருக்க இந்த நடவடிக்கைகள் அவசியம் என்றனர்.

அவன் வெளிநாட்டான், நமது நலனில் அக்கரையில்லாதவன், எனவே ஆர்ப்பரிக்கிறான் என்று காங்கிரஸ தலைவர்கள் கூறினர்—நாடு நம்பியது!

அவன் போய்விட்டான், பாகு மொழி பேசி நம் பச்சை இரத்தம் குடித்த வெள்ளை ஏகாதிபத்தியம் போய்விட்டது. இந்திய நாட்டை, இங்குள்ளோரே ஆளும் நிலைமை ஏற்பட்டு "நம்ம சர்க்கார்" நம்மை ஆள்கிறது.

ஆள்வது, இந்தியத் தலைவர்கள்—வெள்ளையன் குற்றங்களை எடுத்துக் காட்டி, அவனை விரட்டிவிட்டு வெற்றிபெற்ற வீரர்கள்

எனினும்...

1950 பாதுகாப்புச் சட்டம் கொணர்ந்து பட்டேல் நிறவேற்றுகிறார்,

பிரஜா உரிமை நசுக்கப்படுகிறது; பேச்சுரிமை பறிக்கப்படுகிறது.

பத்திரிகைகள் மீது பாணம்! சிறை, துப்பாக்கி, தடியடி... அடக்குமுறைச் சட்டங்கள்!

அடிக்கடி அவசரச் சட்டங்கள் மூலம், அதிகாரம் பெறப்படுகிறது. கேட்டால், நாட்டில் அராஜகம் ஏற்படாமல் தடுக்க, சட்டமும் அமைதியும் காக்கப்பட இவை அவசியம் என்று கூறுகின்றனர்.

'கம்யூனிஸடு' என்று காரணம் காட்டி, பொதுவாக முற்போக்குக் கட்சிகள் மீதெல்லாம் அடக்கு முறைப் பாணங்களை அள்ளி இறைக்கின்றனர்.

எதிர்க்கட்சிக் காரர்களின் பத்திரிகைகள், அச்சகங்களுக்கெல்லாம் ஜாமீன் தொகை கேட்கின்றனர், அன்று வெள்ளையனாட்சி சுயராஜ்யப் போர் நடத்திய காங்கிரஸ் மீது அடக்குமுறை!

இன்று காங்கிரஸ் ஆட்சி—மக்கள் நலன் நாடும் முற்போக்குக்கட்சிகள் மீது அடக்குமுறை!

ஹேஸ்டிங்ஸ் காலம் தொடங்கி பட்டேல் நாள்வரை அடக்குமுறைப் படலம் விரிகிறது—சுருங்கவில்லை!

இந்திய மக்களை அடிமைப்படுத்தி வைக்க ஆங்கிலேயன் இத்தகைய அடக்குமுறை அம்புகளை வீசுகிறான்—காங்கிரஸ் கட்சியினர் அன்று இப்படிப் பேசினர்.

அவன் வெளியேறிவிட்டான், சுயராஜ்யக் குடியரசு மலர்ந்துவிட்டது எனினும் பாதுகாப்புச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் 'நம்ம சர்க்காரில்' புறப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன! வெள்ளையன் பாதையிலேயே, ஆளவந்தார் நடந்துகொண்டிருக்கின்றனர்.

சுயராஜ்யம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் முடியப்போகின்றன.

பாதுகாப்பு சட்டம்
பராமரிப்பு சட்டம்
காவலில் வைக்கும் சட்டம்

ஏற்படுத்தப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. எதற்கெடுத்தாலும் அவசரச் சட்டங்கள் பிரகடனப்படுத்தப்படுகின்றன.

"அடக்குமுறையால் தேசியக் கிளர்ச்சியை அடக்கிவிட முடியாது. சுதந்திர உரிமையை இன்று மதிக்காமல் எங்களை சிறைக்குள் தள்ளலாம். ஆனால் இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் ஒருநாள் பதில்சொல்ல வேண்டியேநேரும்" என்று பண்டித நேரு அப்போது கர்ஜித்தார்! ஆனால், இந்த நினைவு ஆட்சிபீடம் ஏறியபின் மறைந்துவிட்டது, மங்கிவிட்டது!

ஆங்கிலேயன் தனது சுரண்டல் ஆட்சி நடைபெற, இந்நாட்டு மக்களை மனிதாபிமானமின்றி அடக்குமுறைச் சட்டங்களால் ஆட்சி நடத்தினான்.

அதைக் கண்டித்து, அவனை வெளியேற்றிய காங்கிரஸ் ஆட்சி இன்று அதே அடக்குமுறைச் சட்டங்களால் அரசாங்கத்தை நடத்திச் செல்கிறது.

சுயராஜ்யம்—அடக்குமுறை ராஜ்யமாக ஆகிக்கொண்டு வருகிறது!

## நிலம் நோக்கிச் செல்வோம்

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

உதயமாகும் உரிமை முழக்கம்—வெற்றியைத் தருமேயொழிய வீழ்ச்சிக்கு இட்டுச்செல்லாது என்பதன் விளக்கம்.

"உழைப்பவன் வதைகிறான் உணவில்லாமல்!

"ஊர் வப்புக்கும் 'உன்னுடையது, என்னுடையது' என்று பெருமை பேசவும் பரந்த நிலங்கள்!"

"உழைப்பவர்கள் நாங்களிருக்கிறோம் 'ஒருபிடி' மண்கூட இல்லாது—உன்மத்தர்கள் கூறுகிறார்கள் உதவாத நிலமாம் தரிசுத்திடலாம்!" என்று அங்கு விவசாயப் பாட்டாளிகளிடையே எழுப்பியபேச்சு நிலம் நோக்கிச் செல்வோம்!' என்ற முழக்கத்தைக் கிளப்பி—வெற்றி காணச் செய்திருக்கின்றது!

இத்தாலிப் புரட்சி—வாழ முடியாத இதயங்களின் எதிரொலி!

சர்க்காரின் அறிவிப்பு! ஏழை எளியவனை எதிர்த்து நிற்க முடியாது என்பதற்கான உண்மை விளக்கம்!

X X X

நாடு—நிலம்—பொதுவானது, பிறந்து விட்ட எல்லா மக்களுக்கும் சொந்தமானது! ஆனால் இன்று அவை 'என்னுடையது,' 'எனக்கே சொந்தமானது' என்று உரிமை பாராட்டப் படுகிறது, வசதிபெற்று வாழ்க்கையில் வாழும் தந்திரம் அறிந்து, சுயநலச் சூதுக்கோட்டை அமைத்துக்கொண்டோர்களால்!

இந்தச் சூதுக்கோட்டைக்கு வெடி வைக்கப்பட்டிருக்கிறது, வெம்பி வெதும்பி வாழ முடியாதவர்களாக்கப்பட்டோரால், இத்தாலியில்!

நிலமுண்டு—வழியில்லை, வதைகிறோம் என்று அவர்கள் எழுப்பிய அழுகுரல், அப்போது ஆட்சியாளர் செவிகளில் படவில்லை. 'நிலைமையை நீடிக்கவிடாதீர். கட்டுண்டோம் பொறுத்திருந்தோம், இனி தாங்கமாட்டோம்' என்று அவர்கள் விடுத்த எச்சரிக்கை—எரிச்சலாக இருந்தது. மிரட்டும் கண்ணுடனேயே, இத்தாலிய சர்க்கார் நோக்கினர், 'இதனால் என்ன முடியும்?' என்று எண்ணினர்.

குழப்பமும் கிளர்ச்சியும் கொதித்துக் கிளம்பியது—அரசாங்கமும், துப்பாக்கித் துரைத்தனம்செய்தது; பலிக்கவில்லை! உரிமைப் போரை உதாசீனம் செய்யமுடியாத அளவுக்கு நிலைமை வளர்ந்துவிட்டது!

இன்று இத்தாலிப் பிரதமர் காஸ்பெரி பெரிய பண்ணைகளை ஒழித்து, ஏழைக் குடியானவர்களுக்குப் பங்கிட்டுத் தரப்போவதாக வெளியிடுகிறார்!

காஸ்பெரி ஒரு கம்யூனிஸ்டல்ல—எனினும் நாட்டுநிலை அவரை இம்முடிவுக்கு வரச்செய்திருக்கிறது. 'கம்யூனிச வளர்ச்சிக்கு இந்த நடவடிக்கை பெருத்த தடைக்கல்லாகும்' என்று பெருமைபேசிக்கொண்டு இந் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டிய அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது.

உரிமைப்போர்—ஒரு உலராத ஊற்று; தடைக் கற்களால் அதைத் தடுத்துவிட முடியாது! அடக்குமுறை—அதன் வாயிலைப் பெரிதாக்குமே யொழிய அடைத்துவிடாது! காரணம் நேர்மையும் நியாயமும்—உரிமைப் போரின் உபகரணங்களாகும்!

உலகம்—இன்று நாகரீகச் சோலையாக இருக்கிறது. பலவித எண்ணங்கள் அங்கு உலவுகின்றன. ஏழை பணக்காரன் பேதமும் வாழ்வசதி பெற்றவன்—வசதியற்றவன் என்ற வித்தியாசமும் வேரூன்றிக் கிடக்கின்றன.

இந்தப் பிளவும் வித்தியாசமும் மனித நாகரீக வளர்ச்சியின்—இடையில் எழும்பியவை!

வசதியும் வாய்ப்பும் பெற்றோர் வாழ்வதற்கான அழகான வழிகளை அமைத்துக்கொண்டார்கள்—ஏமாந்தவன் ஏழையானான்!

புலியைக் கண்டால் நடுங்குகிறது ஆடு; அதுபோலப் பணக்காரனுக்கு ஏழை ஆட்பட வேண்டியவனான். சமுதாயத்தில் ஆண்டான்—அடிமை என்றநிலை ஏற்படலாயிற்று. ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன், புலியானான்; வாழும் வழிகளை அமைத்துக்கொண்டான்!

இதன் விளைவுகள்தான் இன்று மாடமாளிகை—குடிசை; பணம் படைத்தோன்—பராரி; பெரிய பண்ணை—பிச்சை எடுக்கும் நிலையிலிருப்போன்!

இப்படி ஏமாந்தகாலத்தில் ஏற்றங்கொண்டு, "நான் செய்த பூர்வ ஜென்மபலத்தால் இப்புண்ணிய பிறவி யெடுத்தேன்; என் சொற்படி கேட்க எத்தனை ஆட்கள்! விரல் காணுமுன் ஓடிவர எத்தனை வேலைபாட்கள்" என்றுஎண்ணி இறுமாப்பு அடைந்திருப்போர் இத்தாலியில் என்றுமட்டுமல்ல-ரஷ்யா தவிர்த்து உலக நாடுகளிலெல்லாம் இருக்கவே செய்கின்றனர்!

மனித சமுதாயத்தை மாடென நினைக்கும் மதோன்மத்தர்கள் எங்கும் இருக்கிறார்கள்—இங்கும் இருக்கிறார்கள்!

பெரிய பண்ணைகள்—ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அவைகளுக்குச்சொந்தம். நடுத்தரப்பண்ணைகள்—நூற்றுக்கணக்கான ஏக்கருக்கு உரிமையாளர்கள். சாதரண மிராசுதாரர்கள்—வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டி வரும் அளவில் நிலங்கள்! குடியானவர்கள்-குத்தகைக்கு நிலத்தைப் பெற்றுக் கும்பிட்டுழுவ 'ஏதாவது கிடைக்குமா?' என்ற ஆசையுடன் உழுது பயிரிட்டு, விளைச்சல் கண்டதும் நிலச்சொந்தக்காரருக்கு பாதிநெல்லை அளந்துவிட்டு மீதி நெல்லில் நாட்களை வறுமையில் நகர்த்தும் கூட்டம்! நிலமேயில்லாது-குடிசைக்கும் இடமில்லாது கோவணாண்டிகளாய்க் குளிரையும் வெயிலையும் மறைக்கத் துணியில்லாது உலவிவரும் விவசாயப்பாட்டாளிகள்—ஆதிதிராவிடமக்கள்!

இத்தனை படிக்கட்டுகள்—இந்நாட்டின் விவசாயத்துறையில்!!

இதோடு மட்டுமல்ல—எவ்வளவு நிலம் சொந்தம், இவைகளை யார் பராமரிப்பது, விளைச்சல் கண்டது என்ன என்பதுபற்றி அறியாத, தெரிந்துகொள்ளமுடியாத "பெரும் பண்ணை"களும் இருக்கின்றன! இந்தப்பண்ணைகளுக்கென நமது மாகாணத்தில் இருக்கும் நிலம் கிட்டதட்ட

**8 லட்சம் ஏக்கர்!**

மாயாலோக மனிதப் பிறவிகளை காத்துரட்சிக்கும் கடவுளர்களுக்கென இருக்கும் நில ஆஸ்தி—தான் இந்த எட்டு லட்சம் ஏக்கர்!!

கோயில்கள் மடங்கள் ஆகியபெரிய பண்ணைகளின் 8 லட்சம் ஏக்கர் நில ஆஸ்தியிலிருந்தும் ஆண்டுக்கு,

3½ கோடி ரூபாய்

வருமானம் வருகின்றது.

இந்நாட்டிலுள்ள சமஸ்தானங்களைவிட இந்த 'நடமாடாப் பிரபுக்களின்' வருமானம் மிக மிக அதிகமாகும்!

கோயில்கள், மடங்கள், இடைக்காலத்தில்' எழும்பியவை. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் 'தெய்வ பக்தி'யாலும், ஏமாற்றத்தின் விளைவாலும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கோயில்களுக்கும், கோயிலைச் சார்ந்தோருக்கும் வைத்துவிட்டுப் போயினர்!

அவர்கள் ஆட்சிக் காலத்தில் இன்றைவிட மக்கள்தொகை குறைவு—எனவே பரந்துகிடந்த நிலங்கள் கோயில்களின் பூஜைக்குக் காணிக்கையாக்கப்பட்டன.

ஆனால், இன்றோ—மக்கள் தொகை பன்மடங்கு பெருகிவிட்டது. நாடும் நிலமும் வளராது; மக்கள் தொகையோ ஆண்டுக்கு 15 சதவிகிதம் வீதம் வளர்ந்துகொண்டேயிருக்கிறது! எனினும் முன்பு மன்னாதி மன்னர்களால் "புண்ய காரியங்கள்" எனநினைந்துவிட்டுச் சென்ற ஆஸ்திகள், கோயில்களிலும் மடங்களிலும் குவிந்து கிடக்கின்றன!

ஒன்று, பத்தா, பட்டியலைப்பாருங்கள் எத்தனை கோயில்களும் மடங்களும் பெரும் பண்ணைகளாக இருக்கின்றன.

| | |
|---|---|
| பெரிய கோயில்கள் | 12,322 |
| சிறிய கோயில்கள் | 15,357 |
| பெரிய மடங்கள் | 186 |
| சிறிய மடங்கள் | 114 |
| பெரிய தர்மஸ்தாபனம் | 13,040 |
| சிறிய தர்மஸ்தாபனங்கள் | 15,580 |

இத்தனைக்கும் ஏராளமான ஏக்கர் நிலங்கள்! காடுகள், கழனிகள், தோட்டங்கள் தொல்லை தீர்க்கும் மலர்க்காடுகள், மாட மாளிகைகள்!

அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்தவர், அகிலத்தைக் காக்கும் அனாதரட்சகர், என்னையும் உன்னையும் எல்லாரையும் படைத்து இரட்சிக்கும் பரமபிதா—என்று போற்றிப் பாடப்படும் 'எல்லாம் வல்ல' ஈசனுக்கு இவ்வளவு நிலங்கள் சொத்துக்களாகத் தரப்பட்டிருக்கின்றன!—எட்டுலட்சம் ஏக்கர்கள், எம்பிரானுக்கு — உலகத்தையே உண்டாக்கியவருக்கு, வயல்கள், பண்ணைகள்!!

நடமாடா நிலப் பிரபுக்களைப்பற்றி நடமாடும் நிலப்பிரபு ஒருவர் கூறுகிறார்:-

> "கோயில்களுக்கும் மடங்களுக்கும் இருக்கும் ஏராளமான நிலச் சொத்துக்களை கூட்டுப் பண்ணை முறையில் சாகுபடி செய்யவேண்டும்"

இந்த மணிவாசகம் தந்தவர் மாற்றுக் கட்சிக்காரரல்ல, காங்கிரஸ்காரர்—அதிலும் சென்னை மேல் சபையின் உறுப்பினர்.

நஞ்சை நாடான தஞ்சை மாவட்டத்தின் பிரதிநிதி — வலிவலம் பண்ணை கே. எம். தேசிகர் என்பவர் இந்தக் கருத்துரையைசென்னை மேல் சபையில் வெளியிட்டுள்ளார்.

> கோயில்களில், மடங்களில் ஏராளமான நில ஆஸ்தி.
>
> அவைகளை கூட்டுப்பண்ணை முறையில் சாகுபடி செய்ய வேண்டும்.

இக்கருத்தை, அவர் வலியுறுத்தினாராம், மேல்சபையில். "இந்து" தகவல் தந்திருக்கிறது.

X X X

ஏழைகள், இடுப்பொடியவேலை செய்பவர்கள், இரண்டுங் கெட்ட நிலையில் இருக்கும் 'குட்டி' மிராசுதாரர்கள்—இப்படி சின்னாபின்னப் பட்டுக் கிடக்கிறது, 'ஏழை' இந்தியா!

பலருக்கு நிலம் கிடையாது; சிலருக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர்கள்! ஒருவன் வாழ—பலநூறு பாட்டாளிகளின் உழைப்பு, வியர்வை, கண்ணீர்!

"அவன் வந்தவிதி இது; நம்பதலையெழுத்து இது!" என்ற பாவ புண்யப் பிரச்சாரம் மக்கள்மீது படையெடுத்து அவர்கள் சிந்தனைக்கு திரையிட்டிருக்கிறது. எனினும், இன்று ஏழைகளின் இதயங்கள் எரிமலையாகிக் கொண்டிருக்கின்றன!

"நிலம் நோக்கிச் செல்வோம்" என்ற முழக்கம் இங்கு எழும்பவில்லையே தவிர 'நிலத்தை நோக்கி அவர்கள் கண்கள் எல்லாம் செல்லத் துவங்கிவிட்டன. உரிமை முழக்கம் உதயமாகத் துவங்கியிருக்கிறது! இதன் எதிரொலியைத்தான் வலிவலத்தார் குறிப்பிட்டிருக்கிறார், கோயில் நிலங்களைக் குறிப்பிட்டு!

உரிமைப் போரை நசுக்க இத்தாலி சர்க்கார் எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. முடிவு—தோல்வி, பணிவு! பெரிய பண்ணைகளை ஒழித்து: நிலங்களைப் பங்கிடப் போவதாக அறிவிப்பு!

இத்தாலி சம்பவம்—இந்திய சர்க்காருக்கு ஒரு எச்சரிக்கை.

ஏழை எரிமலையை அணைத்துவிட முடியாதென்பதற்கான அறிவிப்பு.

இப்போதுதான் இந்திய நாட்டின் நாலு பக்கங்களிலும் விவசாயிகளின் உரிமை முழக்கம் ஆரம்பமாகத் துவங்கியிருக்கிறது. ஏழை விவசாயி நிமிர்ந்து நிற்கத் துவங்கிவிட்டான் 'ஏன்' — என்ற கேள்வி அவன் இதயத்தில் எழும்ப ஆரம்பித்துவிட்டது.

* * *

இத்தாலி சர்க்காருக்கு வந்த அளவு விவேகம் இந்திய சர்க்காருக்கு ஏற்படுமென்று நாம் எண்ணவில்லை.

காரணம், காங்கிரஸ் ஆட்சி—இன்று நிலப்பிரபுக்களாலும்சீமான்களாலும் கோமான்களாலுமே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது!

பெரிய பண்ணைகளிடம் — இவர்கள் நெருங்கமாட்டார்கள், நெஞ்சில் கூட அந்த நினைவு இவர்களுக்கு எழும்பாது.

எனினும், இன்று வயலிலே எழும்பியிருக்கும் புயலை துப்பாக்கி அடக்கிவிடாது. நிலமில்லாமல் தவிக்கும் ஏழை—எரிமலையைத் தடுத்துவிட முடியாது!

நிலப் பிரபுக்களிடம் நெருங்க அஞ்சும் ஆளவந்தாருக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறோம்—தற்கால'சாந்தி'க்கு!

அண்மையில் இம்மாதம் 6ந்தேதியன்று போலந்து—போரில் சிக்கிச் சீரழிந்து, இரண்டான நாடு—சர்க்கார் ஒரு உத்தரவு பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

"மாதாகோவில்களுக்குச் சொந்தமான "எஸ்டேட்டுகள்" யாவும் தேசியமயமாக்கப்படும். சர்க்காரே யேற்று அவைகளை மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்படுமாறு செய்யும்"

என்பதுதான், போலந்து பார்லிமெண்டு நிறைவேற்றியிருக்கும் சட்டம்.

இத்தாலியப் பாதையில் நடக்க அச்சமிருந்தால், போலந்து வழியில் நடக்கலாம்! ஓரளவு பயன் கிட்டும்—சில இலட்சம் மக்களாவது பலன் பெறுவார்கள்!

நடமாடும் தெய்வங்கள் நம்மை நடுங்கவைக்குமே என்று காங்கிரஸ் ஆளவந்தார் பயப்படலாம். நடமாடாத் தெய்வங்களானகடவுள்கள், ஆத்திரப்படமாட்டார்கள்-மனிதாபிமானம்நிறைந்தஒருசத்காரியத்தைத் தானே செய்கிறார்கள் நம் 'குழந்தைகள்' என்ற எண்ணத்தால்!

எனவே, ஒழுங்கான திட்டம் ஒன்று வகுத்து, கோயில்கள் பெயரால் பரந்து கிடக்கும் நிலங்களை—மக்கள் உழைத்து பயனடையும் வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். வடலி வலத்தார் கூறியது போன்று கூட்டுப் பண்ணைகளைக்கூட ஏற்படுத்த முனையலாம்—கடவுள் கோபிக்கமாட்டார், 'எங்கும் நிறைந்த அவர்' இந்த அற்ப விஷயத்துக்காக ஆத்திரப் படமாட்டார்!

பல ஊர்களில், பல்லாயிரக் கணக்கான மக்கள் வசிக்கும் மனைக்கட்டுகள் கூட—கோயில்களின் பெயரால் தானிருக்கின்றன. வாழப் பிறந்த மனிதர்கள்—வாழக்கூட இடமில்லாது இருக்கின்றனர் — குடிசைக்குக்கூட மனையில்லாமல் திண்டாடுகின்றனர்!

எனவே, இந்த மனிதாபிமானம் நிறைந்த காரியத்தை,துணிச்சலோடு செய்து முடிக்கலாம்—மக்கள் ஆதரவும் கிட்டும்!

கோவில் பெருச்சாளிகளுக்கும் தர்மகர்த்தாக்களுக்கும்வீண்விழாக்களுக்குமென விரயமாகும் ஏராளமான நெல்களஞ்சியங்கள் — ஏழையின் வயிற்றுத்தீயையாவது அணைக்கும்.

நிலப்பிரபுக்களிடம் நெருங்க அஞ்சும் ஆளவந்தாருக்கு இந்தயோசனையைத் தெரிவிக்கிறோம்.

நிலம்நோக்கி இன்று உழவர்கள் எண்ணங்கள் திரும்பிவிட்டன. நிலம் நோக்கிச்செல்வோம்—என்றஉரிமை முழக்கம் என்றாவது ஒருநாள்எழும் பித்தான் தீரும்.

தீ பரவுமுன் — அதைத் தடுத்து வைப்பது நல்லதாகும். ஏழைகள் இதயங்களை, வீணேகிடக்கும் வயல்களைக்காட்டி, இன்பம் பெறச்செய்யலாம். பெரியபண்ணைகளின் நிலங்களைப்பிடுங்கி, அதனால் ஏற்படும் எரிச்சலையும் ஆத்திரத்தையும் தாங்க பயப்படும் காங்கிரஸ் ஆட்சியாளர்—"எல்லாம்வல்ல" ஈசனின் நிலங்களைக்கொண்டு உடனடியாகஏழைகள் வாழ்வு செழிக்க ஓரளவு வகை செய்யலாம். வழியிருக்கிறது; மனத்துணிவு உண்டாகுமா?

—()—

ராம நவமி

11-ம் பக்கத்தொடர்ச்சி

வைத்தியம் செய்யப்பட்டு வருகிறதாம்!

ஆயுளையே "அவன்" சேவைக்கு அர்ப்பணித்தவர், கடவுளுடன் விரும்பும்போதெல்லாம் பேசிக்கொண்டிருப்பதாகக்கூறப்பட்டவர், மகான்—மகரிஷி— பகவான் என்றழைக்கப்பட்டவர், அல்லும் பகலும் அனவரதமும் ஈசுவர நாமத்தையே பஜித்துக்கொண்டிருப்பவர் — இப்போது கையில் கட்டி கிளம்பியதால், கஷ்டப்படுகிறாராம்! அதற்கு மருத்துவம் செய்ய வைத்தியர் முயல்கிறாராம்!

X X X

கடவுள் பஜனையிலேயே காலத்தைக்கழித்தவருக்குக்கையிலேகட்டி! ஆயுள் முழுதுமே ஓய்வுடனிருந்து, ஆன்ம சுத்தமாய் 'ஐயன்' பெயர் சொல்லியவருக்கு ஆபத்து! அதைக் கண்டும் எல்லாம்வல்லகடவுள் வந்து எதுவும் செய்யவில்லை—வைத்யர் தான் போகிறார்! எனினும், "இவர்" எழுதுகிறார்:— ஒருநாள் விடுமுறை விடவேண்டும் சர்க்கார்! அதனால் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் ஏற்படும் என்று 'உபதேசம்' செய்கிறார்!

ரமணர் தகவலைத் தரும் "இந்து" இந்தக் கடிதத்தையும்பிரசுரித்திருக்கிறது!

இத்தகைய 'புனிதர்'களைத்தாங்கியிருக்கிறது இந்நாடு'

ராமநவமியைக் கொண்டாட ஒருவர் விடுமுறை வேண்டும் என வேண்டுகோள் விடுகிறார்! வாழ்க்கை முழுவதையுமேராமநவமியாகக் கழித்து—கடவுளின் அவதாரம் என்று—கருதப்பட்டவர் தனது அந்திய காலத்தில் அவதிப்படுகிறார்!! ராமநவமி—மக்களுக்கு! ரமண மகரிஷிக்கு—வைத்தியர்!

—❀—

10-ம் பக்கத் தொடர்ச்சி

முடிவில் 'ஜெய் ஹிந்த்' போட்டு வருகிறார்கள். இது ஏன்? வானொலி நிலையத்திற்கும், கட்சி வணக்கத்திற்கும், பூமி வணக்கத்திற்கும், பிற வணக்கத்திற்கும், தொடர்பு என்ன? வானொலி நிலையத்திலிருந்து பேசுவோர் நாடு முழுதுமிருந்து கேட்போரை முன்வைத்து அவர்களுக்கு வணக்கம் சொல்லி, பேசி முடிப்பது தானே நியாயமாகவும் நேர்மையாகவுமிருக்கும். இந்த முறையைத் தானே பிற நாடுகளிலுள்ள வானொலி நிலையத்தினரும், கையாண்டு வருகின்றனர். இந்தப்புத்தி திருச்சி நிலையத்தாருக்கு இல்லாத காரணம் என்ன?

இப்பொழுது நாள்தோறும் இந்தி போதனையை வானொலி நிலையத்தில் நடத்தி வருகின்றனர். பள்ளியிலேயே இந்தி கட்டாயபாடமாக இருக்கக்கூடாது என்று கூறும் பொழுது வானொலியில் இந்தியைக் கட்டாய பாடமாக நாள்தோறும் திணிக்கப்பட்டு வருவது ஏன்?

பாடுவதற்கு, பேசுவதற்கு, நடிப்பதற்கு என்று ஒரு குறிப்பிட்டவகுப்பினருக்கு மட்டும், வகுப்பு வெறிகொண்டு, தொடர்ந்து சலுகை காட்டப்பட்டு வருகிறது.

இக் கொடுமைகள் அனைத்தும் அழிந்து ஒழியவேண்டாமா? என்பதை எண்ணிப் பார்க்குமாறு உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழ்ப் பெருமகனையும், ஒவ்வொரு தமிழ் இளைஞனையும் வேண்டுகிறோம்.

★

திராவிட நாடு

ஞாயிறு] 19—3—50 [காஞ்சி

# பஞ்ச—நாதம்!

★

எண்ணிய எண்ணமெல்லாம்
மண்ணானதே—
என் இதயமும் புண்ணானதே!
எதிர்பார்த்த யாவும்
வீணானதே—நான்
என்செய்வேன் கோபியாதே!

X X X

வேதனை விருத்தம் பாடியிருக்கிறார், என்னென்னவோ எதிர்பார்த்தேன்! என் முகத்தில் கரி பூசிவிட்டார்கள் என்று ஓலமிட்டிருக்கிறார்!

திட்டங்கள் தீட்டியுள்ளேன்—எல்லாம் காற்றுக் கோட்டை போல ஆகிவிட்டது என்று கலங்கியுள்ளார்.

சொந்த நாட்டின் நன்மைகளை எண்ணி பல யோசனைகளை வைத்திருந்தேன் – எல்லாவற்றையும் சூழ்நிலை தோற்கடித்துவிட்டது, துயரத்தைத் தந்திருக்கிறது என்று வேதனைப்பட்டிருக்கிறார்!

என்மேல்கோபித்தால்என்ன செய்வேன், என் நிலைமை இப்படியாகிவிட்டதே என்று பரிதாபக் கண்ணீர் சிந்தியிருக்கிறார்!

"ஒதுக்கப்பட்டிருக்கும் பணத் தோகையைக் காணும் போது எனக்கு மிக, மிக வருத்தமாயிருக்கிறது"

"எந்தப் பக்கமும் செல்லமுடியாத வகையில் இருக்கிறேன்"

"எனது திட்டங்களையெல்லாம் மூட்டை கட்டி வைக்கவேண்டியதுதான்"

"நிதியில்லை; கதியற்றவனாகிவிட்டேன்!"

"போனவருஷம் ஆறு கோடி ரூபாய் 'அடித்துப் பிடித்து' பெற்றேன். வருஷம் முடிவதற்குள் அதிலும் கை வைத்துப்பத்து சதவிகிதத்தைப் பிடுங்கிக்கொண்டே விட்டார்கள்."

"ஏழைகளுக்கும் இயலாதவர்களுக்கும் உபகாரச் சம்பளங்கள் கொடுக்க முடியவில்லை—பணமில்லை!"

இந்தியக் கல்வி மந்திரியார், இந்தியப் பார்லிமெண்டில்—எழுப்பியிருக்கும் பரிதாபச் சிந்தின் பகுதி இது!

கல்விமுன்னேற்றத்துக்கெனப்பல திட்டங்கள் போட்டிருக்கிறேன்—பணமில்லையென்று சர்க்கார் மறுத்துவிட்டனர், எனவே, அவைகளை மூடிவைக்க முடிவு செய்யும்படியாகிவிட்டது—என்று அவர் வெளியிட்டிருக்கிறார்.

கல்வி மந்திரி சபை கையாலாகாத மந்திரிசபையென்று காரசாரமாகப் பல உறுப்பினர்களால் கண்டனமாரி பொழியப்படவே—முகாரி எழுப்பியிருக்கிறார் கல்வி மந்திரி ஆசாத்.

மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தனது இலாகாவைச் சர்க்கார் கவனிப்பதாக—முன்பு கதறியவர் இவர், பலதடவைகளில் கதறிக்கொண்டேயிருப்பவர்.

கல்வி மந்திரியின் கலக்கம், உறுப்பினர்கள் கண்டனர், கண்ட காங்கிரஸ் தலைவர் பட்டாபி பரிதாபத்துடன் கூறுகிறார், 'கண்டிக்காதீர்கள்-அனுதாபங் காட்டுங்கள்! பாவம், அவர் என்ன செய்வார்? 'அற்ப' தொகைதான் அவர் இலாகாவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு, எப்போதுமே சர்க்கார் தொடர்ச்சியாக கல்விமந்திரி சபையை உதாசீனம் செய்துவருகிறது. உறுப்பினர்களே ஆத்திரபடாதீர்கள்" என்ற கருத்துப்பட!

கல்வி இலாகா, கல்விக்கானவகைகளில் நாட்டம்செலுத்தவில்லை என்று உறுப்பினர்கள் கண்டிக்கிறார்கள்.

கல்வி மந்திரியாரோ, நானென்ன செய்வேன்? நிர்க்கதியாய்நிற்கிறேனே என்று ஓலமிடுகிறார்.

ஊராளும் கட்சியின் தலைவரோ' உண்மைதான்— அப்படித்தான் சர்க்கார் போக்கு இருக்கிறது என்று அனுதாபப்படுகிறார்.

X X X

...கல்வி—மக்களின் அறிவுக்கேணி, ஆனால், இந்தப் பரிதாபகரமானநாட்டில் படித்தோர் தொகை நூற்றுக்கு ஒன்பது கூட இல்லை!

பிற்போக்கும், பரிதாபமும் பின்னிக்கிடக்கிறது கல்வித்துறையில்.

சுதந்திரம் பெற்றுவிட்டோம் இனி எல்லோரும் உரிமை பெற்றுவிட்டார்கள் — பெற்றுள்ள உரிமையை மக்களறிந்து வாழ, யாவருக்கும் கல்வி கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று — மந்திரிமார்கள் முழக்கிவருகிறார்கள்.

மாகாண சர்க்கார்கள், தங்களால் இயன்ற அளவு கல்வித்துறையில கவனம் செலுத்த நினைத்தாலும் நிதி அவர்களைக்கதியற்றவர்களாக்குகிறது. டெல்லியை நோக்கவும், டெல்லி கோபப்பார்வை பார்க்கவும், 'கேட்டது தப்பு' என்று வெறுங்கையுடன் திரும்புவதுமான நிலை நீடிக்கிறது.

கல்வியை வளர்ப்பதில் சர்க்கார் மட்டுமல்ல—பொதுநலம் பேணும் நல்லவர்கள் கூட ஈடுபட்டிருக்கிறார்கள். சொந்த முறையில் ஏராளமான பள்ளிகள், கல்லூரிகள் துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இருந்தும் 'இடமில்லை' என்று வீடு திரும்பும் எண்ணற்றவர்களைக் காணமுடிகிறதே தவிர, 'கல்வித் தோட்டத்தில்' மக்கள் மகிழ்ந்துலாவும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

ஏழைகளை அறியாமை இருட்டுக்கு அடிமைப்படுவது நீடித்து நடக்கிறது.

போலீஸ், சிறை ஆகியவைகளுக்கென ஏராளமான பணத்தைச் செலவழிக்கின்றனர்—மாகாண சர்க்கார். ஆனால் எதிர்கால உலகத்தைச் சிருஷ்டிக்கும் கல்வியோ புறக்கணிக்கப் படுகிறது, போதுமான கவனம் செலுத்தப்படாமல்.

ஆட்சிப் பீடமேறியோர் தங்கள் ஆட்சி நிலைக்கவேண்டும், நிரந்தர தர்பார் நீடிக்கவேண்டும் என்பதில் எடுத்துக்கொள்ளுமளவு அக்கறை எதிர்காலத்தைச் சிருஷ்டிக்கும் துறைகளில் காட்டவில்லை.

கேட்டால் 'பணமில்லை' என்ற பதில் கிடைக்கிறது. பரிதாபச்சிந்து பாடப்படுகிறது.

மாகாண சர்க்கார்கள்தான் இந்த 'மயான காண்டத்தை' ஒப்பு

விக்கின்றனவே யென்று, மத்திய சர்க்கார் கல்வி மந்திரி சபையைப் பார்த்தால் — அங்கிருப்பவர் கண்ணீர் சிந்துகிறார்! கவனிப்பதில்லை என்று கவலைப்படுகிறார் — மாற்றாந் தாய் போல இருக்கின்றனர் மத்திய சர்க்கார் என்று குறைப்படுகிறார்.

வெளி நாட்டிலிருந்து கடன் வாங்கும் வசதியும் ஆசையும் உடைய மத்திய சர்க்கார், "மாற்றாந் தாயாக" இருக்கின்றனராம் — மந்திரியார் கூறுகிறார்.

ஆமாம், அப்படித்தான் நடத்துகிறார்கள் என்று அதை ஒப்புக்கொள்கிறார் ஆளவந்தாரின் கட்சித் தலைவர்.

X X X

பணமில்லை என்று முக்கிய திட்டங்கள் குறித்து மாகாண சர்க்காரும், அவர்களை ஆட்டுவிக்கும் மத்திய சர்க்காரும் கூறும் போதெல்லாம், நம் போன்றார் அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறோம்.

கண்ணைத் திறந்துகொண்டு கடும் பாறையில் மோதிக்கொண்டு—கஷ்டப்படுகிறீர்கள், என்று சொல்லி வருகிறோம்.

பாதுகாப்பு, படைபலம் என்று கூறிக் கொண்டு, நாட்டு வருமானத்தின் சரிபாதிப் பணத்தை செலவழித்துவிட்டு, தேசப் புனருத்தாரணத்திட்டங்களுக்குத்திகைத்து நிற்கிறது இந்திய சர்க்கார் என்று பன்முறை சுட்டிக்காட்டி வருகிறோம்.

நமது சொல்—ஆளவந்தாருக்கும் நம்முடன் வாழும் தேசிய நண்பர்களுக்கும் 'தேளா'கத் தென்படுகிறது!

தனது இலாகாவுக்குப் போதுமான நிதி மான்யம் அளிக்கப்படாத தன் காரணத்தை அபுல்கலாம் ஆசாத் கூறுகிறார்:—

> "பிரிவினைக்குப் பின் பாதுகாப்புக்கும், சீரமைப்புக்குமென ஏராளமான தொகை செலவழிகிறது. எனவே, போதிய தொகை கிடைக்கவில்லை"

அவர், அமைச்சர் — காங்கிரஸ் கட்சியை நடத்திச் சென்ற கண்ணியர், மத்திய சர்க்காரின்மந்திரி, அவர் கூறுகிறார் அதிகப்பணம் 'ஆகஸ்டு 15'க்குப் பின் பாதுகாப்புக்கெனச் செலவழிகிறதென்று!

பாதுகாப்புப் படைச்செலவுகளுக்கென 168-கோடி ரூபாய்களைச் செலவிடும் சர்க்கார் கல்விக்கென நான்கே நான்கு கோடி ரூபாய்களைத் தான் தருகிறது-தரமுடியும் என்று சொல்கிறது!

X X X

நிதி நிலைமை சீர்கெட்டுக் கிடக்கிறது—இதை இந் நாட்டின் பொருளாதார நிபுணர்கள் எல்லாம் கூறி வருகிறார்கள்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தை விடக் காங்கிரஸ்கட்சியினர் ஆட்சிக் காலத்தில், நிதி—சீர்குலைந்து விட்டது; நிர்வாகப் பாதை, சரியாக இல்லாத காரணத்தால்.

மாற்றுக் கட்சியினர் என்ற மாச்சரியத்தால் நாம் இதைச் சொல்லவில்லை. காங்கிரஸ்ஆட்சிப்பீடம்ஏற்ற நேரம்—போர்ப்புயல் ஓய்ந்த நேரம், பொருளாதாரப் பிரச்னைகள் மலைபோல் நின்ற காலம்—இந்த உண்மைகளை நாம் மறுக்கவில்லை.

ஆனால், போரில் சிக்கிச் சீரழிந்த சிறு நாடுகள் எல்லாம் தங்கள் பொருளாதார நிலைமைகளைச் சமாளித்துக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

போலந்து சிறு நாடு—போர்ப்புயலில் முதலில் சிக்குண்ட பிரதேசம்! அது இந்தவாரம், தான் உறுப்பினராகயிருக்கவில்லையென்று கூறி "சர்வதேச பாங்கி"லிருந்து ராஜினாமா செய்திருக்கிறது.

நாட்டுப் பாதையை நல்ல தாக்கிக் கொள்ள முடியும்—அதற்கான வழிவகைகளைக் கண்டுவிட்டோம் என்று துணிச்சலுடன் வெளியிடுகிறது.

ஆனால், இந்திய ஆட்சியினரோ இந்த மூன்று ஆண்டுகளில் எதையும் சாதிக்கவில்லை; சங்கடங்களை வளர்த்துக்கொண்டே வருகிறார்கள்.

புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடு — பண்படுத்தப் படவேண்டிய காடுதான். ஆனால், காட்டை, நல்ல நாடாக்கத் தவறியது மட்டுமல்ல இன்னும் காடு முரடாக்கிவிட்டனர், காங்கரஸ் ஆட்சியாளர்.

பொருளாதார நிபுணர்கள் இல்லாத நாடல்ல இந்தியா—இருந்தும் காங்கிரஸ் ஆட்சியாளர், 'ஆள்வது காங்கிரஸ்' என்ற காரணத்தால், அவர்கள் யோசனைகளைவிடத்தங்கள் ஆசைவழிச் செல்வதையே நோக்கமாகக் கொண்டு, நடந்துவருகின்றனர்.

பணம் வாங்கச்சர்வதேச பாங்க், பரிவுப் பாசம் காட்ட அமெரிக்கா, படாடோபப் பேச்சுப்பேசபலவெளி நாட்டுத் தூதவர்கள்—எல்லாம் இருக்கிறது, இந்தியாவுக்கு. எனினும் பாதை இருட்டாகத்தான் இருக்கிறது. வரும் பணம் வழி தவறிய பாதைகளில்தான் சென்று கொண்டிருக்கிறது.

அவர் கர்ஜித்திருக்கிறார், 'அக்கிரமமாக' நடக்கிறது என்று குற்றஞ் சாட்டியிருக்கிறார், ஆகுமா இந்தப் போக்கு என்று அங்கலாய்த்திருக்கிறார்!

இரண்டு 'ரோடு'கள் நிர்மாணிக்க உத்தரவு கொடுத்தார்களாம்—கரடு முரடான காட்டுப்பாதையில் இரு புதுப் பாதைகள் நிர்மாணிக்க அனுமதியும் பணமும் வேண்டுமெனக் கோரினார்களாம் அஸ்ஸாம் மாகாண சர்க்கார்!

பாதையமைத்துக் கொள்ள அனுமதியும், அதற்காக இரண்டு கோடி ரூபாயும் அளித்திருக்கின்றனர். ஆனால், இப்போது சட்டசபையில் போக்குவரத்து மந்திரி கதறுகிறார், "இரண்டு கோடி வீணாப்விட்டது. வேலைகள் முடியவில்லை, பணம் பாழாகிவிட்டது. பலனில்லாத வேலை" என்று!

அஸ்ஸாம் மாகாணத்தில் ஆட்சி நடத்துவதும் காங்கிரஸ்காரர்தான். அந்த அரசாங்கம் பொதுப் பணத்தை விரயம் செய்துவிட்டது என்று வேதனை கீதம் எழுப்புகிறார். பாதைபோட அனுமதிக்கப் பட்டது—பாதை போட்டுக்கொண்டிருக்கும்போது போய்ப் பார்த்துவிட்டும் வந்தாராம்கனம் சந்தானம். இருந்தும் 'அனாவசியமான செலவு வேண்டாம் இந்த வேலை இப்போது' என்று தடுக்காத அவர் இப்போது கண்டன அம்புகளை வீசுகிறார்!

மக்களின் வரிப்பணத்தில் இரண்டு கோடி ரூபாய்—வீணாகி யிருக்கிறது. இந்திய சர்க்காரின் மந்திரி இத்தகவலைத் தருகிறார்.

ஆட்சிப் பொறுப்பு — அடுப்பங்

கரை வேலையல்ல; ஏதோ வருகிறது, காரியம் முடிகிறது, என்று போய் விட!

ஆனால் அவ்வளவு அலட்சிய மனோபாவம் ஆளவந்தாரிடையே காணமுடிகிறது.

நன்மைகளைச் செய்யப் போகிறோம் எனத் திட்டங்கள்—தினசரி புறப்படுகின்றன, ஒவ்வொரு மந்திரியிடமிருந்தும். வெளிவந்த திட்டங்களில் ஒன்றிரண்டு தவிர எல்லாம் உதவாக்கரையாகி விடுகின்றன — பணமில்லையென்று கூறிப் பயனற்றவையாக்கப்பட்டு விடுகின்றன.

எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்களுக்கு, இவ்வளவு செலவழியும் என்று முதலிலேயே எந்தச்சர்க்காரும் ஒரு முடிவு கட்டிக்கொண்டு தான், அனுமதி அளிப்பார்கள். தீவிர யோசனைகள், ஆலோசனைகள் ஆகியவைகளின் முடிவாகவே அத்திட்டம் ஆட்சியாளரின் அங்கீகாரம் பெறும்.

அப்படி ஏற்று அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் சிலவற்றில் ஒன்று தாமோதர பள்ளத்தாக்குத் திட்டம். இத்திட்டம் நிறை வேறினால், மேற்கு வங்கம் பீகார் ஆகிய இரு மாகாணங்களைச் சேர்ந்த 7½-லட்சம் ஏக்கர் நீர்ப்பாசனம் பெறுமாம். கட்டப்பட்டு முடிக்கப்பட்டால் இந்த அணையில் 47-லட்சம் சதுரஅடி நீர் தேக்கப்படலாமாம். இத்தகைய பயனுள்ள ஒரு திட்டம் ஒன்றைக் கட்டி முடிக்க 55-கோடி ரூபாய் செலவழியுமெனச் சர்க்காரால் முன்பு அறிவிக்கப்பட்டது. ஆண்டு இரண்டு கூட முடியவில்லை—இப்போது சர்க்கார் அறிவிக்கின்றனர் மொத்தம் 65 கோடி ரூபாய் செலவழியுமாம! திட்டம் போட்ட சர்க்கார் மாறவில்லை—ஆனால் தொகை வளர்ந்து கொண்டேபோகிறது! மாறுகிறது!!

X X X

வரவு—செலவைக் கவனித்து வகையான ஏற்பாடுகளைச் செய்ய, ஆட்சியாளர் தவறுகின்றனர். ஆறு மாதங்களுக்கு முன் 40-கோடி ரூபாய், செலவினங்களில் குறைக்க வேண்டி நேர்கிறது என்று பட்டேல் நடவடிக்கை யெடுத்தது யாவருக்கும் தெரியும்—கடந்த ஆண்டு பட்ஜட் தயாரிக்கும் போது, சரியாகத்தான் தயாரித்தார்கள். ஆனால், ஆறுமாதம் ஆவதற்குள் அதிகச் செலவு ஆகிவிட்டது என்று, எல்லா இலாகாக்களிலும் செலவைக் குறையுங்கள் என்று கட்டளையிட்டார்கள்! சென்னை மாகாணத்துக்குக் கொடுப்பதாகச் சொன்ன 6-கோடி கடனைக் கொடுக்கமுடியவில்லை என்று கூறி, மறுத்தார்கள்! கல்விக்காக ஒதுக்கியிருந்த 6-கோடியிலும் முக்கால் கோடியை எடுத்துக்கொண்டு விட்டார்கள்!

X X X

நிர்வாகச் சீர்குலைவும், நிமிஷத்துக்கொரு நடவடிக்கையும் காங்கிரஸ் ஆட்சியில் மலிந்து விட்டன. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கல்வி மந்திரியார் கண்ணீர் சிந்துகிறார்—அதற்கு அவர் காட்டும் காரணங்கள் உண்மைதான் என்று உரைக்கிறார் காங்கிரஸ் தலைவர்.

ஆள்வது காங்கிரஸ் ஆட்சி—அதன் போக்குக்குக் கண்ணீர் சிந்துவதும் காங்கிரஸ் தலைவர்கள்!

கல்விக்குப் பணமில்லை—தரவசதியில்லை என்று சொல்கிறார்கள்!

சமஸ்தான மன்னர்களின் சுக போகச் செலவுக்கென ஐந்துகோடி ரூபாய்களை—எவ்வித வரியுமின்றி—வழங்குகிறார்கள்!

வெள்ளையன் வெளியேறிய பின் இந்நாட்டுச் சமஸ்தானங்களின் இடுப்பு ஒடிந்துவிட்டது—மன்னர் 'மண் பொம்மை'கள் ஆகிவிட்டார்கள். தனிப்பட்ட அவர்களின், சுக வாழ்வுக்கு, எவ்வளவோ சொத்துக்களிருக்கின்றன. இதுவரையில் மக்களைச் சுரண்டி அவர்கள் சேமித்து வைத்திருக்கும் செல்வம்—ஏராளம்! எனினும், இந்திய சர்க்கார் 'இஸ்பேட்டு ராஜாக்கள் தானே இவர்கள், எங்கள் சர்க்கார் வரட்டும் இவர்கள் கொட்டத்தை அடக்குகிறோம்' என்று வீரப் பிரதாபம் பேசிய காங்கிரஸ் சர்க்கார் ஐந்துகோடி ரூபாயை அள்ளித் தருகிறது.

ஐந்து கோடி — ஏழை மக்களின் வியர்வைத் துளியால் செலுத்திய ஐந்துகோடி அவர்களின் கோலாகல வாழ்வுக்கு!

படை பலம், ஆடம்பரம் பணத்தைக் கொள்ளை கொள்கிறது—எதிர்கால வாழ்வை நிர்மாணிக்கும் காரியங்கள் காற்றுத் தூசியாகின்றன!

மக்கள் நலன்—உலர்ந்த மலராகிவிட்டது, ஆகிக்கொண்டேவருகிறது!

உணவு, கல்வி, உடை, இருக்க வீடு—இவைமக்களின் அடிப்படைத் தேவைகள்.

இவைகளுக்குச் சில கோடியும், அந்தஸ்து பாதுகாப்பு என்கிற வெளிவேஷத்துக்குப் பல கோடிகளும்!

ஏழைகள் ராஜ்யம்—என்று இதற்குப் பெயராம்! நிர்வாக ஊழலும் திறமைக் குறைவும் தாண்டவமாடும் இதற்குப் பெயர் சுயராஜ்யமாம்!

வீண் ரோடுக்கு விரயமிட பணம், போட்ட திட்டத்துக்கு அதிகம் செலவழிக்க பணம், 'ஆட்டியன்' ராஜாக்களின் சுகவாழ்வுக்குப் பணம், அரசியல் தூதர்கள் பெருமை வாழ்வுக்குப் பணம், படை பலங் காட்ட பணம்......

எல்லாவற்றிற்கும் கிடைக்கிறது! ஆனால், ஜீவாதாரப் பிரச்னைகளுக்கு மட்டும் 'பஞ்ச—நாதம்' கிளம்புகின்றது! பணமில்லை என்றமுகாரிஎழும்புகின்றது!!

—✻—

## வானொலி நிலையம்!

திருச்சி "தமிழர் நாடு" இதழில், "திருச்சி வானொலி நிலையத்தின் சூழ்ச்சி" என்று தலைப்பிட்டுதோழர் கி. ஆ. பெ. விசுவநாதன்எழுதியிருப்பதாவது:—

நாள்தோறும் ஒலிபரப்பின் முடிவில் வணக்கம் என்று சொல்லப்பட்டுவந்தது. இப்போது அது நிறுத்தப்பட்டுவிட்டது. இது ஏன்? இத் தமிழ்ச் சொல்லால் விளைந்த தீமை என்ன?

இப்போது ஒலி பரப்பைத் துவங்கும்போது வந்தேமாதரம் எனக்கூறி வருகிறார்கள். இது ஏன்? வானொலி நிலையம் ஒரு அரசியல் மேடையா? அல்லது வானொலி நிலையம் ஒருகட்சிக்காரர்களுக்கு மட்டும் சொந்தமா? அது வரி செலுத்தும் பொது மக்களுக்கோ, பிற மதத்தினருக்கோ, பிற கட்சியினருக்கோ சொந்தமில்லையா?

(7-ம் பக்கம் பார்க்க)

# ✻ ராம நவமி ✻

★

பிரிட்டிஷ் ஆட்சி மீது ஒரு பாய்ச்சல்,

ஆச்சாரியார் அரசாங்கத்திடம் மனக்குறை,

பொதுவாகச்சர்க்காருக்கு ஒரு வேண்டுகோள்

தெரிவித்திருக்கிறார் அவர். அந்நியன் சரண்டிச் சென்றான்; ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் போதிய நன்மைகள் மலரவில்லை; எனவே இனியாவது நல்ல முறையில் நன்மைபயக்கும்வகையில் சர்க்கார் நடந்துகொள்ள வேண்டும் என்பதல்ல அவரது வேண்டுகோள்!

நன்மைகள் ஏற்படும்
நல்லது மலரும்
சமாதானம் உண்டாகும்
சச்சரவு தீரும்

என்றுபட்டியல் தந்துள்ளார், தனது வேண்டுகோளுக்கு சர்க்கார் இசைந்தால், இவையெல்லாம் ஏற்படும் தனது யோசனையின்படி என்று!

இவ்வளவு நன்மைகள் மட்டுமல்லவாம், "கஷ்டங்கள் தீர்ந்து மனச்சாந்தி ஏற்படும். மாயாலோக பந்தங்களிலிருந்து விலகி மறுமையில் இன்பம் பெறவும் அது உதவும்" என்றும் கூறுகிறார்.

தான் குறிப்பிடும் இத்தனை நன்மைகளும் ஏற்பட அரசாங்கத்தார் ஒரு நாள் விடுமுறை விட்டால் போதுமாம் — அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சி, இவ்வளவு நன்மைகளைத் தரும் அந்நாளை விடுமுறை நாள் எனப் பிரகடனப்படுத்தவில்லை—ஸ்ரீவைஷ்ணவாளுக்கு மட்டுமே சலுகை தந்தது! 'ராசகோபாலாச்சாரி சர்க்காரோ' அத்தினத்தை எல்லா இந்துக்களுக்கும் விடுமுறை தினம் என அறிவித்தது. ஆனால் ஒருநாள் விடுமுறை கிடைப்பதால் அன்று செய்யவேண்டிய அலுவல்களை ஒரு சனிக்கிழமையன்று—விடுமுறை நாளன்று — வந்து செய்து விடவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது.

"இப்படித்தானா செய்வது-அந்த ஒரு தினத்தைச் சட்ட பூர்வமான சர்க்கார் விடுமுறையாகப் பிரகடனப் படுத்தினால் என்ன? இந்த ஆண்டாவது அப்படிச் செய்யுமா?" என்று தான் அவர் தம் வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

தனது வேண்டுகோளை அவர் நேராகச் சர்க்காருக்கு அனுப்பி வைக்கவில்லை — 'இந்து' பத்திரிகையில் 'கடிதம்' ஆக எழுதியிருக்கிறார்—எனவே தான் நம்மால் அவரது விருப்பத்தை அறிய முடிந்தது!

வரும் மார்ச்சு 27ந் தேதி யன்று ராம-நவமி வருகிறதாம். அதற்கு ஒருநாளைச் சர்க்கார் விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமாம்!

இதுதான் 'இந்து' என்ற புனை பெயரில் மறைந்துகொண்டு அவர் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கும் வேண்டுகோள்.

பிரிட்டிஷார் மீது பாய்ச்சல், சி. ஆர். மீது மனக்குறை ஆகியவைகள், இந்த ராம-நவமிநாளைப்பொது விடுமுறை நாளாக ஆக்கவில்லை என்பதுதான்!

"ராம-நவமி தினம் எவ்வளவு புண்யம்வாய்ந்தது! ஸ்ரீராமநாமத்தை நாலு தடவை உச்சரித்தால் போதுமே! ராமநாமமே கற்கண்டு—அதை நம்பாத பேருக்கு எமதண்டனையல்லவா!" என்றெல்லாம் எச்சரிப்பதுபோலத் தனது கடிதத்தில், ராம-நவமி தினத்தை சர்க்கார் பொதுவிடுமுறை நாளாகவிடவேண்டும் என்று கோரியுள்ளார்.

கிருஷ்ண ஜயந்திக்கு மட்டும் விடுமுறை—ராமநவமிக்கு மட்டும் ஏன் விடுமுறை விடக்கூடாது?—என்று கேட்கிறார்.

'ராம் தூன்' மகிமை பொருந்தியது, தேசத்தின் பிதா சாகும் வரையில் உச்சரித்துக் கொண்டிருந்தது ராமநாமம் தானே—அவராலேயே போற்றிப் புகழப்பட்ட ராமரின் பிறந்த தினத்தை ஏன் விடுமுறை நாளாகப் பிரகடனப் படுத்தக் கூடாது—என்று தக்க மேற்கோளையும் காட்டுகிறார்.

ஸ்ரீராமபிரானின் திருக்கல்யாண குண விசேஷங்கள் — தீராதவினையெல்லாம் தீர்த்துவைக்கும்திறமை—இம்மை நீக்கி பரமபதம் கொண்டு செல்லும் அவரது நாமம், என்றெல்லாம் புனைபெயர் கொண்ட 'புனிதர்' தனது கடிதத்தில் 'பகவானுடைய அருள் கிடைத்தால் பாவ விமோசனம் அடைந்து விடலாம்' என்று பக்திபுபதேசம் செய்துள்ளார்.

x x x

அவர் சாதாரணமானவரல்ல! ஒரு பெரிய மகரிஷி! மகான்!! மக்களைக் கவர்ந்தவர்! பெரிய கோயில் கொண்டவர்!

படித்தோரும் பாமரரும் பக்கமிருந்து பணியாற்றுகின்றனர்!

'கடிதம் எழுதியவர்' குறிப்பிடுகிறாரே ஒரு நாள் விடுமுறை கோரி—அதுபோல தன் பிறந்தநாள் முதல் இன்றுவரை எந்த வித வேலையும் செய்யாமல் எல்லா நாட்களையும் விடுமுறையாகவே கழிப்பவர்—பகவான் நாமத்தைப் பஜித்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுபவர்! ஏன்?—அவரையேகூடப் பகவான் என்று அழைக்கின்றனர்!

மகரிஷி, பகவான் என்று கூறப்படும் அவரைக் காண இந்திய கவர்னர் ஜெனரல்கூட டெல்லியிலிருந்து ஒரு முறை ஓடிவந்திருக்கிறார்!

அப்பேற்பட்டமகிமைவாய்ந்தமகானுபாவரைப்பற்றி, ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் சாதாரணமான செய்தியல்ல— "அதிகார பூர்வமான வட்டாரத்திலிருந்து" கிடைத்த செய்தியாம்! அறிவிக்கிறது "இந்து"!!

அவ்வளவு பெரிய 'அதிகார பூர்வமானவட்டாரத்திலிருந்து' கிடைத்த தகவல் என்ன தெரியுமா!

"இடது கையில் எழும்பி இருந்த பிளவை—வாய் (கட்டி) மிகவும் பெரிதாக ஆகிக் கொண்டே போகிறது"

என்பதுதான் — மகரிஷி, பகவான், மகத்தான சக்தியுடையவர், கடவுளின் மறு அவதாரம் என்றெல்லாம் போற்றப்பட்ட திருவண்ணாமலை இரமணருக்குக் கையில் கட்டி புறப்பட்டிருக்கிறதாம்! வர வர வீங்கிக் கொண்டே வருகிறதாம்! தள்ளாத வயதில் மிகவும் கஷ்டப்படுகிறார்.

(7-ம் பக்கம் பார்க்க)

# இன்னொரு மைல்கல்

வசதியில்லாத கிராமம்-எனினும் வந்து குழுமினர் பல்லாயிரக்கணக்கானமக்கள்!

எப்பக்கம் திரும்பினும் மனித வெள்ளம்—விவசாய வீரர்கள், வாலிபப்படை, நற்றொண்டர் கூட்டம்!

தென்னாற்காடு மாவட்ட மாநாடு இயக்க வரலாற்றின் ஒரு ஏட்டை நிரப்பிவிட்டது. நம் இதயங்களிலெல்லாம், பூரிப்பையும் பொதுச் சேவையின் வெற்றியையும் விளக்கிவிட்டது!

"இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் இப்பந்தலை முடித்தோம்—அதோ, அந்த இடத்தில் இருபது நாட்களாக இரவு பகல் விழித்து அருமையான பந்தலை அமைத்திருந்தோம். நேற்று முன்தினம் அதைப் பிரிக்கும்படி அந்த இடத்துக்குச் சொந்தமான அதிகாரி கட்டளை பிறப்பித்தார். என்ன செய்வது என்று விழித்தோம் — எனினும் தளரவில்லை! அந்த இடத்தில் பந்தலை நிர்மாணித்தோம்!" என்று விளக்கினார் ஒரு தோழர்!

பிரித்தோம்—கட்டினோம் என்று வெகு சாதாரணமாகக் கூறினார்! கஷ்டப்பட்டுப் போட்ட பந்தலை, மாநாட்டுக்கு முதல்நாள் பிரித்துவிட்டு, மறுநாளைக்குள் இன்னொரு இடத்தில் அதே அளவில், அழகான மேடை பல்லாயிரக் கணக்கானோர் தங்க வசதி, ஓவியக் கண்காட்சிக்கென ஒரு இடம்...என்று கட்டி முடிப்பதென்றால்...?

எதற்கும் அஞ்சோம், எதையும் தாங்க இதயம் உண்டு என்று கூறி நிற்கும் நமது இலட்சியக் காளைகளின், ஆர்வக் களஞ்சியங்களின் உவகைக் கூத்து, நம் உள்ளத்தை ஒரு உலுக்கு உலுக்கியது!

குறிஞ்சிப்பாடி, ஒரு கிராமம். மின்சார வசதியில்லாத ஊர். எனினும், விளக்கு அலங்காரம் கண்ணைப் பறித்தது; கருத்தைக் கவர்ந்தது! செயல்திறம் நிரம்பிய தென்னாற்காடு திராவிட முன்னேற்றக் கழக வீரர்களின் வெற்றிகாண இதயம் குதூகலித்தது!

இடையூறுகள், தொல்லைகள், இவைகளினூடே தென்னாற்காடு மாவட்ட மாநாடு—விவசாய வீரர்களின் படைமுகாமாக இருந்தது! பொது மக்கள் பல்லாயிரவரின் பொங்கிய எழுச்சியைப் பிரதிபலித்தது!

மாநாட்டிற்குநண்பர் இரா. நெடுஞ்செழியன் தலைமைதாங்கினார். அவர் மக்களுக்கு அறிமுகமான ஒரு மாணிக்கம்! வாலிபப்படையின் இதயங்களில் இருப்பவர்! வக்கணைப் பேச்சும், வம்பளப்பும்இங்கே வேண்டாம்! எழுந்து செல்வீர்!!' என்று வீர ஒலி எழுப்பும் வீரர். நிமிடங்களைக் கட்சிக் கோட்டையின் கற்களாக ஆக்கிக் கொண்டிருப்பவர். அவரது சிங்கநாதம் — கருத்துப் பொறிகள்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய விளக்காயிருந்தது!

பத்திரிகானுபவமும் பரந்த அறிவும் நிரம்பி, பகுத்தறிவுப் பாசறையின் படை வீரனாகயிருக்க, 'பற்பல நன்மைகளையெல்லாம் இழப்பினும், இலட்சியத்துக்காகவே வாழ்வேன்' என்ற எண்ணத்துடன் தன் வாழ்க்கைப் பாதையில் நடந்துவரும் சிந்தனைச் செல்வர், நண்பர் பூ. கணேசன், மாநாட்டுத்துவக்கஉரை, கருத்தாழம் நிரம்பியிருந்தது! நமது எதிர்கால வேலைகள் எத்தனையெத்தனையிருக்கின்றன. என்பதை நினைவூட்டுவதாகயிருந்தது!

"என் இலட்சியம் இயக்க வெற்றிதான், வேறு எதுவும்அல்ல!" என்று முழக்கமிட்டு, தென்னாற்காடு மாவட்டத்தை எத்தகைய "கட்சிக் கோட்டையாக்கப் போகிறோம், பாரீர்!" என்று வெளியிட்டார் வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் சாம்பசிவம்!

"பொதுச் சேவை—ஒரு கூட்டுக் குடும்பம். சுயநலத்துக்கும் சொந்தப் பெருமைக்கும் அங்கு வேலையில்லை! பாருங்களேன் இவர்களை" என்று சொன்னார், ஒரு நண்பர்!

உண்மையில் அவர்களைப் பார்த்தபோது அந்த எண்ணம்தான் நமக்கு ஏற்பட்டது. "ஒருவருக்கொருவர் போட்டி — இயக்கத்தை வளர்ப்பதில். இப்படியல்லவா இருக்க வேண்டும்!" என்றார் மாநாட்டின் செயலாளர் K. T. S. பழனியப்பனைக் காட்டி!

அவர் கூறியது அனைத்தும் உண்மை. குறிஞ்சிப்பாடித் தோழர்கள், புகழ்ச்சொல் விரும்பிகளல்ல; செயலில் போட்டிவேகம் உள்ளவர்கள்; எடுத்ததை வெற்றியுடன் முடிக்கும் வீரர்கள் என்பதை அவர்கள் உணர்ச்சிப்பெருக்குடன். ஓடியாடி வேலை செய்தமுறை, நன்கு காட்டியது! உணர்ச்சியின் பிம்பங்களான மாநாட்டு வரவேற்புக்குழுப்பொறுப்பாளர்களான சாம்பசிவம், பழனியப்பன், வைத்தியலிங்கம், குழந்தைவேல் அனைவரும் நமது பாராட்டுக்குரியவர்கள்.

மாவட்ட மாநாட்டை இவ்வளவு வெற்றிவிழாவாக ஆக்க ஏராளமான தொண்டர்கள் முனைந்து நின்று உழைத்தனர். பயன்கருதாஅப்படை வீரர்களைக் கண்டபொழுது, "வாழ்க! வாழ்க அவர்கள்" என்று நம் இதயம் கூறியது.

மாநாட்டைச் சிறப்பிக்க தோழர்கள் கடலூர் இளங்கோ, விருத்தாசலம் முனுசாமி, கல்லக்குறிச்சி கோவைக்கிழார், சிதம்பரம் திருநாவுக்கரசு, கண்ணாடி கோவிந்தராஜுலு, முள்ளஞ்சாவடி ராஜன் போன்ற பலர் பாடுபட்டனர். அவர்கள் சேவை மிக மிக பாராட்டற்குரியது.

மாவட்ட மாநாடு சிறப்பாக முடிந்துவிட்டது — தென்னாற்காடு மாவட்டத்தில் நம் இயக்கத்திற்கு இருக்கும் செல்வாக்கையுணர்த்திவிட்டது! கிராமவாசிகள் குடியானவப் பெருங்குடிமக்கள் நம் இலட்சியப் பாதையில் இறங்கிவரும் வேகத்தையுணர்த்திவிட்டது.

தென்னாற்காடு மாவட்ட மாநாடு வளர்ந்துவரும் முன்னேற்றக்கழகத்தின்—இன்னொரு மைல்கல்.

தென்னாற்காடு மாநாடு இயக்க நதியில் திரண்டுவரும் மக்கள் சக்தி என்ற மகத்தான வெள்ளத்தைக் காட்டிவிட்டது. திரண்டு வரும் வெள்ளத்தை, அறிவுக்கழனியில் தேக்கி, ஆவனசெய்ய வேண்டியது, மாவட்ட வீரர்களின் மகத்தான பொறுப்பு!

# "நிலம் நோக்கிச் செல்வோம்!"

★ ★ ★ ★ ★ ★ ★ ★

அவர்கள் கைகளிலெல்லாம் மூன்று வார்த்தைகள் கொண்ட அட்டைகள்!

"நிலம்—நோக்கி—செல்வோம்! என்று முழக்கமிட்ட வண்ணம் கூட்டாக முன்னேறிக்கொண்டேயிருந்தனர்! சில நிமிடங்கள் ஓடிச் செல்வர், கொஞ்சநேரம் நடந்து செல்வர், இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் ஓட்டமும் நடையும்! இவ்வித உற்சாகம் அவர்கள் இதயங்களிலெல்லாம் கொந்தளித்துக் கூத்தாடிற்று! வாலிபர்—வயோதிகர், பெண்கள் ஆண்கள் எல்லாரும் கூட்டங் கூட்டமாகச் சென்றனர்! 'கன்னிநிலம் எமது, அதைக் கையாளப் போவதும் நாங்கள்' என்று கோஷமிட்டுக்கொண்டே சென்றனர்!!

இரும்புப் பாறைகள் ஏர் கலப்பைகள் அவர்கள் தோளிலேயிருந்தன! எந்தெந்த இடம், எவரெவருக்குப் பிடித்தமோ. அங்கு தாங்கள் பயிரிடப்போவதாகக் கூறிக்கொண்டனர்!

கிட்டத்தட்ட ஒருமாகாணத்தைச் சேர்ந்த குடியானவர்கள் எல்லாம் இந்தப் புரட்சிப் படையில் குழுமிக் கிடந்தனர்!

தரிசாகக் கிடந்த நிலம்—காடு முரடாகக் கிடந்தகாட்டுப்பிரதேசம், 'எதற்குப் பிரயோஜனம்? ஒன்றுக்கும் இலாயக்கில்லை. எனினும் அது எங்கள் ஆஸ்தி' என்ற பெருமைப் பேச்சுக்கு மட்டும்பயன்பட்ட பண்படாத கன்னி நிலம்—அவர்கள் கைக்குள் வந்தது! ஒரு இலட்சம் ஏக்கர்களைத் தங்களுடையது என்று பிரகடனப்படுத்தினர்!

"வீண்பெருமைக்குஏன், நிலம்?'

"வியர்வை கொட்டி உழைத்து விளைவும் நாமே எடுத்துக்கொள்வோம்!"

"தரிசு நிலமாம்—நம் கைபட்டால் தங்கம் விளையும் பூமியாகிவிடும்!"

"ஒரு இலட்சம் ஏக்கர் — பண்படுத்தினல் உலகும் நம் வயறெல்லாம் நிறையும்!"

இதுபோன்ற எண்ணங்கள், இதயத்திலே எழும்பி, அது வளர்ந்து வெடித்து இந்தக் குடியானவப்புரட்சி நடைபெற்றிருக்கிறது, இத்தாலியைச் சேர்ந்த கலபிரியா மாகாணத்தில்!

இந்த உரிமை முழக்கம் போருக்குப் பின்வெகு வேகமாகப் பொங்கிக் கொண்டிருந்தது என்றாலும்—போலீஸ் மிரட்டல், துப்பாக்கிப் பயம், காரணமாக அப்போதைக்கப்போது அடக்கப்பட்டுவிட்டது!

எனினும் இம்மாதம் குடியான மக்கள், நிலத்திலே உழைக்கும் விவசாயப் பாட்டாளிகள் வீறுகொண்டெழுந்து, வீணாக் கிடந்த நிலங்களை எல்லாம் தாங்கள் பயிரிடப் போவதாக முழக்கமிட்டவண்ணம், கூட்டமாகச் சென்று ஆக்கிரமித்துக் கொண்டனர்.

உழைக்க மக்கள் இருக்கிறார்கள், அவர்கள் உழைத்து உணவு தேடிக் கொள்வதற்கும் பூமியிருக்கிறது!

ஆனால் அது அவர்கள் வசமில்லை —தரிசாகக் கிடக்கிறது, நிலப்பிரபுக்களின் 'ஆஸ்திப் பெருமைப் பேச்சுக்கு ஆளாகி, வீணே கிடக்கிறது!

இது என் — என்று கேட்டுக் கொண்டு எழும்பிய இத்தாலிய விவசாயப் பாட்டாளி மக்களை அரசாங்கத்தார் கடந்த ஆண்டு அடக்க முனைந்தனர். இப்போது, 'நிலம் நோக்கிச் செல்வோம்!' என்ற முழக்கத்துடன் சென்று ஆக்ரமித்துக் கொண்டுள்ளவர்கள் கடந்த ஆண்டு முனைந்தனர். அம்முயற்சி வெற்றிகரமில்லை—விளைவு, 9 குடியானவர்கள் போலீஸ்குண்டுக்கு இரையானார்கள்!

சுமார் ஒன்றேகால் இலட்சம் சதுரமைல் பரப்புள்ள இத்தாலியின் தென் பகுதிப் பிரதேசமும் குறிப்பாக சிசிலி, சார்டினீயா முதலிய மாகாணங்களும், வறுமையின் உறைவிடங்களாகும். ஏழ்மை எரிமலை அங்கு வெடித்ததன் விளைவாகவே கலபிரியா குடியானவர்கள் கொந்தளித்து எழும்பி, நிலப்பிரபுக்களின் ஆஸ்திகளை, உரிமையாக்கிக் கொண்டிருக்கின்றனர் — சுயநலச் சூதுக்கோட்டையைத் தகர்த்திருக்கின்றனர், ஆட்சியாளரின் மிரட்டல் 'அராஜகம்' கூடாது என்ற ஆர்ப்பரிப்பு ஆகியவைகளை துச்சமென மதித்து!

"நிலம் நோக்கிச் செல்வோம்" என்ற சம்பவம் நடந்து சரியாக இரண்டுவாரங்கள்கூட ஆகவில்லை. இத்தாலிய சர்க்கார், பணிந்து இருக்கின்றனர். விவசாயப்புரட்சியின் வேகம், அவர்களை விவேகிகள்போல ஆக்கியிருக்கிறது.

இம்மாதம் 14-ந்தேதியன்று இத்தாலியப் பிரதமர் சிக்ஞர் அல்சைட் டி காஸ்பேரி பின்வரும் ஏற்பாடுகளைச் செய்யப்போவதாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்

> பெரியபண்ணைகள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படும்.
>
> வேலையில்லாத விவசாயப் பாட்டாளிகளுக்கு பிரித்துத் தரப்படும்.

எட்டுநாட்கள் ஓய்வுஒழிவில்லாது முனைந்து நின்று இம்முடிவுக்கு வந்திருப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

விவசாயப்புரட்சி— சர்க்காரைப் புதுப்பாதையில் திருப்பிவிட்டிருக்கின்றது. கோரிக்கையைநிறைவேற்றுவதுதவிர வேறுவழியில்லை என்ற நிலைமையை உண்டாக்கியிருக்கின்றது!

$37\frac{1}{2}$ லட்சம் ஏகர்பெரும்பண்ணைகளை $2\frac{1}{2}$ லட்சம் குடியானவர் குடும்பங்களுக்குப் பங்கிட்டுத் தரும்படியான முடிவைச் செய்யும்படி செய்திருக்கிறது. நிலப்பிரபுக்களின், சொத்தைப்பறிமுதல்செய்து பங்கிடுவோம்' என்று அறிவிக்கச் செய்திருக்கிறது.

• • •

இத்தாலிச் சம்பவம் வளர்ந்து வரும் உரிமைப்போரில் ஒருகட்டம்.

(5-ம் பக்கம் பார்க்க)

# மனப்போர்

தில்லை வில்லாளன்

### நீலன் பேசினான்

சின்னஞ்சிறுவயதில் பாக்கியம் அவனிடம் நெருங்கியபோதெல்லாம் விரட்டியிருக்கிறான்...விலகியும் ஓடியிருக்கிறான். ஆனால் இன்றோ சேரன் பாக்கியத்தின் அணைப்புக் கிடைக்குமோ என்று ஏங்குகிறான். அன்று கருப்பி என்று அடித்து விரட்டினான். இன்று கண்மணியே, கற்கண்டே....என்று கவிதை பாடுகிறான். அன்று ஓட்ட வந்த போது எட்டிப்போடி குட்டியெனத் திட்டியிருக்கிறான். ஆனால் இப்பொழுதோ அவள் இவனைப் பற்றி நினைக்காத நேரத்தில் அங்கே வரலாமோ, அருள் தரலாமோ...... என்று பக்திப் பாசுரம் இசைக்கிறான்! என்ன விசித்திரம்...? பருவ காலக்குறும்பின்பயங்கரநடனப்.... .. இளமைத் துள்ளலின் விபரீதப் போராட்டம்......அம்மம்ம, சொல்லுந்தரத்ததோ! மலரிடம் மணமும், நிறமும் ஏன் இருக்கின்றன?...... பெண்ணிடம் பருவ மலர்ச்சியும், கவர்ச்சியும் அதற்காகத்தான் குடியிருக்கின்றன!வண்டுபாடுகிறதுவனப் புள்ள மலர்த்தோட்டத்தில!

அன்று புகைவண்டி நிலையத்தில் பாக்கியத்தை ஏன் பார்த்தான்...... பார்க்காமலிருந்தால் இந்த மனப்போர் எழுந்திருக்காதே! புதிய 'டாக்டர்' வருகிறார் என்று வரவேற்க ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தினிடையிலே தான் அந்த ஒயிலாள் நின்று கொண்டிருந்தாள். சேரன் பார்த்தான்......ஆச்சர்யத்தால் அச்சுப் பொம்மையானான். அவனால் அவன் கண்களையே நம்பமுடியவில்லை. பாக்கியத்தின் எதிர்கால உருவம் இப்படி மனதை உருக்கும் வடிவமாக இருக்கும் என்று அவன் எண்ணவே இல்லை! செந்நிற 'பாடர்' வெள்ளைப் புடவையில் அவளது தோற்றம் அவனை ஆட்டியது.....அவன் நெஞ்சத்தை உலுக்கியது.....சிந்தனையைக் கலக்கியது.........அவனையே அவனது மனச்சாட்சி அறைந்து அறைந்து கேட்டது! அவளைப் பார்த்துப் பேசவேண்டும் என்ற அடக்க முடியாத ஆசை வந்துவிட்டது! இருந்தாலும் அந்தக் கூட்டத்திற்கிடையில் அவளை அழைத்துப் பேசுவது அவ்வளவு நன்றாக இருக்குமா......! கொஞ்சம் காலந்தாழ்த்திப் பார்க்கலாம் என்றால் அவன் போக வேண்டிய வண்டியின் 'கார்டும்' 'டிரைவர்களும்' பக்காத் துரோகிகள்........கொடியை ஆட்டி விட்டார் அந்த 'கார்டு'........சத்தங் கொடுத்து விட்டார்கள் வண்டியோட்டிகள்! பாக்கியத்தை அவன் பார்க்கவேண்டும் என்று கொஞ்ச நேரம் நிறுத்துகிறார்களா என்ன...! இங்கு மட்டுமா இவர்கள் இப்படித் 'துரோகம், செய்கிறார்கள்! இது அவர்களுக்கும் வாடிக்கையான வேடிக்கை......அதிகநேரம் நிறுத்த வேண்டும் என்று நினைக்கிற இடத்தில் நிறுத்த மாட்டார்கள்...வேண்டாத இடத்தில் வேணமட்டும் நிறுத்தி நமது வசவுகளை வாரிச் சேர்த்துக் கட்டிக்கொள்வார்கள்!

அந்தத் தோற்றம்......பாக்கியத்தின் இரயிலடி தரிசனம்...அவனைப் பக்தனாக மாற்றிவிட்டது. பல நாள் சிந்தித்துப் பிறகு அந்தக் கடிதம் எழுதினான்—போட்டும் விட்டான். இப்பொழுது மீண்டும் அதைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டான். போட்டதினால் ஏற்படும் விளைவுகள் எப்படி எப்படி இருக்குமோ என்று அவன் எண்ணினான்.

நீலனிடம் எதையும் ஒளிக்காமல் மறக்காமல் சொல்லிமுடித்தான். பிறகு நீலனின் விடையை எதிர்பார்த்து அமைதியாக அவன் முகத்தைப் பார்த்தான்!

"பாக்கியத்தின் மீது பாய்ந்துள்ள பாசத்திற்குப் பெயர் என்னப்பா?"

"காதல் என்றுதான் கருதுகின்றேன், ஆனால் அதில் எனக்கு நம்பிக்கையில்லை!"

"இலக்கியங்கள் பலவற்றில்..."

"படித்திருக்கிறேன்......எழுத்தாளர்கள் மண்டியிலே விற்கப்படும் விசித்திரமான பண்டம் அது என்று முடிவு கட்டியும் இருக்கிறேன். ஆனால் அந்த எண்ணம் இப்பொழுது மாறுகிறது!"

"அப்படியானால் இப்பொழுது சகுந்தலை, துஷ்யந்தன் தொடர்பு காதல் என்கிறாய்?"

"காளிதாசர் அப்படித்தானே சொல்கிறார்!"

"காளிதாசர் கிடக்கட்டும்...பாக்கிய தாசர் என்ன சொல்கிறார்?"

"காதல் என்று தான்!"

"அப்படியானால் காதல் என்பதன் இலக்கணத்தை எனக்குச் சொல்லலாமா?"

"தத்துவப் பெரியாரே, தாங்களே சொல்லுங்கள்!"

இப்பொழுதுதான் சேரன் கொஞ்சம் சிரித்தான்.

நீலன் பேசினான்......

காதல் ஒரு 'கார்பன் பேபர்'— ஆண் என்ற மேல் தாளில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களை அப்படியே பெண்ணாகிய கீழ்த்தாளில் அமைக்கவேண்டும். இதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும், சேரன் மனதிலே மட்டும் பாக்கியம் நிறைந்திருக்கிறாளே ஒழிய, அவள் மனதில யார் இருக்கிறார்கள் என்று இன்னுந் தெரிந்துகொள்ளவில்லை. அதற்குள் சேரன்—அதுவும் காதலில் நம்பிக்கையில்லாது நேற்றுவரை காதலாவது கொத்தவரங்காயாவது என்று கேலிபேசிய வாலிபன் இன்று காதல் கொண்டு விட்டேன் என்று பிதற்றுகின்றான்; நிறுக்க எடை. பொருள் தாங்கும் இரண்டு தட்டுகள் வேண்டும் துலாக்கோலுக்கு... உருள இரண்டு சக்கரங்கள் உண்டு, வண்டிக்கு......வாழ்க்கை நிலத்தில் காதல் வண்டியோட ஆண் பெண் எருதுகள் வேண்டும்!

சகுந்தலையை வனத்திலே கண்டு, பேசி, காந்தர்வமணம் முடிக்கிறேன் என்றுகூறிக் காதல் நாவலின் கடைசி அத்தியாயத்தையும் முடித்துவிடுகிறேன். சேரன் அப்படியே விரும்புகிறானா? காதல் என்றுபேசிப் பெண்மையைக் களங்கப்படுத்திவிடுவதுதானா முறை, நெறி, அறம்......? காந்தர்வ மணம் என்று சொல்வதெல்லாம் அவசரக்கோலத்தின் அள்ளித்தெளிப்பு வேலைதானா? அடக்கவேண்டிய உணர்ச்சியை அடக்கத் திறமையில்லாத முறையினால் பெண்மையை ஏமாற்றிப் பலியிடுவதா? இது காதலா......காமமா......இரண்டுமில்லையா......புதுப் பெயரிடவேண்டிய வாழ்க்கைத் திருவிழாவா?

சாகுந்தலத்தின் மேல்ஏடுகளைப்புரட்டினால் அதன் விபரீதம் நம்மைப் பார்த்துப்பயங்கரமாகவெறிச்சிரிப்பு வீசும். சகுந்தலையின் வயிற்றிலே குழந்தை, துஷ்யந்தன்மனதை மாற்றச் சாபம்......! அந்தக்காலக் காளிதாசருக்கு மனதைக் கெடுத்த முனிவரையும் அவரிட்ட சாபத்தையும் துணைக்கு வரும்படி அழைக்க முடிந்தது! ஆனால் இன்று! சேரன் காலம்மாறு பட்டது. பாக்கியத்தைப் போன்ற பைந்தொடி மகளிர் பலருண்டு. பார்வையாலேயே தூர்வாசரின் சாபத்தைவிடக் கடுமையான சாபங்களுக்கு உள்ளாக்குவார்கள். தூர்வாசரின் சாபம் அவனின் இன்பக்கேணி எழிலரசி ஒருவளைமட்டும் மறக்கச்செய்தது. தற்கால சாபம் பெற்றவளையும், உற்றவளையும், ஊரையும்கூட மறக்கச்செய்யும்! சேரனை அத்தகைய சாபந் தீண்டாமலிருக்குமா நிச்சயமாக. அப்படித் தீண்டாது இருந்தால்தான் அவன் அவளை நெருங்கவேண்டும். சகுந்தலைக்காவது வானத்திலே இருந்து பறந்து வந்து அழைத்துச்செல்லத் தெய்வலோகத் தாய் உண்டு. பாக்கியத்திற்கு அப்படி யார் இருக்கிறார்கள்?

பாக்கியத்தை உண்மையில் மணக்க உறுதிவேண்டும். அதில் கடினமானது என்று சொல்லத்தக்கதாக ஒன்றுமில்லை. இருவரும் ஒரேகுலம், இனம், ஊர்........படித்தவர்கள்! ஆகவே தடையில்லாத நேரத்தில் கொடிப் பாதையிலேதான் செல்லவேண்டும்.

ஆகவேதான் சேரன் காதல்,கீதல், அது, இது...வென்று இப்பொழுது உருகுவதில் அர்த்தமில்லை. நேராகச் சென்று அவள் மனதையும் அறிந்து பின்னர் ஒத்த எண்ணமிருக்குமானால் காதல் என்று முடிசூட்டி விழாச் செய்யட்டும்! ஒருபக்கமன ஆரவாரத்தை வைத்துக்கொண்டு தீர்மானிப்பது தவறு — மாற்றிக்கொள்ள வேண்டிய முடிவு!

## காதல் ஆராய்ச்சி

இப்படி நீலன் அறிவுரை நிகழ்த்தினான்.

அவன் மேலும்...........

"சாகுந்தல நாடகத்தில் விதூஷகன் என்றொரு பாத்திரம் உண்டே தெரியுமா"

என்றான் திடீரென!

"ஏன்...தெரியும்...இருக்கிறான்!" ஆச்சரியத்தோடு விடையளித்தான்!

"அவனுக்கு என்ன வேலை?"

"அரசனோடு இருந்து அவன் மகிழ்ச்சியைப் பெருக்குவது....... வளர்ப்பது!!"

"ஆம்....சேரா, அரசனைப்போல என்னை நினைத்துக்கொள், இருவருமே செல்வோம பாக்கியத்திடம்! கவலையை விடுக......எதிர்காலத்தை எண்ணிநட...எனக்கு இந்தத்துறையில் பிறருக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கக்கூடிய அளவு பயிற்சி உண்டு"

"நீலா...உண்மையில் என்னுடன் வருகிறாயா? நீ வருவதானால்எனக்கு எவ்வளவு ஆறுதல்......என் மனப் போராட்டத்தில் ஒருதிடீர்மாற்றம்!"

இருவரும் சிரித்தனர். பிறகு நூலநிலயத்தை நாடிச்சென்றனர்.

அன்று இரவே திருச்சிக்குப்புறப்பட்டனர் இருவரும். புகைவண்டியில நல்ல இடமாகப்பார்த்து அமர்ந்தனர். கூட்டம் அதிகமென்றாலும் நிற்கவேண்டிய சாமியிடமில்லை, எஸ் ஐ. ஆர். தெய்வம்! புகைவண்டிக்காரர்கள் தெய்வத்திலும பெருந்தெய்வம்...ப...ணத்தையும் வாங்கிக்கொண்டு வரந்தருவதில்லை. சாதாரணதெய்வங்கள் படையலும், பூசையும், வாங்கிக்கொண்டு சோதனையை முடித்துக்கொண்டு 'ரிசல்ட்' வெளியிட்டுவிடுகிறார்கள் பரமபத 'டிக்கட்' கொடுப்பதன்மூலம்! இவர்கள் பணபடையல், பூசை பக்தியைப்பெற்றுக் கொண்டு நுழைவுச்சீட்டுக் கொடுத்தும் சோதிக்கிறார்கள் ... ஆகவே ஒருபடி மேல்தானே!

சேரனுக்குத் தூக்கம் வருமா? இலக்குமணன் காட்டிலே அண்ணனுக்கும அண்ணியாருக்கும காவலிருக்கநித்திரா தேவியைப் பதினான்கு ஆண்டுகள் 'டைவர்ஸ்' செய்திருந்தாராம். பாக்கியத்தைப் பார்க்கும்வரை தூக்க மாதைத்தூர விலகியிருக்கச் சொல்லமுடியாதா என்ன......சொல்வதென்ன, பொழுமையாலேயே அவள் ஓடிவிட பாட்டாளா! நீலனுக்கு அர்ச்சுனன்கூடச் சென்ற கண்ணன் 'உத்தியோகம்'... தூங்க முடியுமா?......ஆகவே இருவரும் பேசிக்கொண்டே சென்றனர்.

(தொடரும்)




**25-3-50 முதல்**

சென்னை. பிரபாத், கெயிட்டி, சரஸ்வதியில்!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press.
95, Tirukkachinambi Street, Kancheepuram.